தமிழ்நாடு அரசு

ஒன்பதாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி 1

தமிழ்

ENGLISH

தமிழ்நாடுஅரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – 2018

(பொதுப் பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil _Term_II_FM_06_07_2018.indd 2 10-07-2018 11:54:38

முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil _Term_II_FM_06_07_2018.indd 3 10-07-2018 11:54:38

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil _Term_II_FM_06_07_2018.indd 5 10-07-2018 11:54:39

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil _Term_II_FM_06_07_2018.indd 6 10-07-2018 11:54:40

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை இன்றைய இளம்தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

ஒவ்வொரு இயலையும்
ஆர்வத்துடன் அணுக
உரைநடைஉலகம்,
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக . . . . .

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ளத்
தெரிந்து தெளிவோம்
தெரியுமா?
யார் இவர்?. . . .

காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
இணையவழி உரலிகள் . . .

ஆளுமை மிக்க
ஆசிரியர்களுக்கும்
ஆற்றல் நிறை
மாணவர்களுக்கும்...

பாடப்பகுதிகளின் தொழில்
நுட்பக் கருத்தை விளக்கத்
திட்பமும் நுட்பமும். . . .

படிப்பின்
அகலமும் ஆழமும் தொடர
அறிவை விரிவு செய் . . .

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . . .

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழிவிளையாட்டு . . . .

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .

மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு . . . .

பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil _Term_II_FM_06_07_2018.indd 7 10-07-2018 11:54:41

பொருளடக்கம்

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	ப. எண்
1	கல்வி	கல்வியிற் சிறந்த பெண்கள்	2
		குடும்ப விளக்கு	8
	கசடற மொழிதல்	சிறுபஞ்சமூலம் *	11
		வீட்டிற்கோர் புத்தகசாலை	13
		இடைச்சொல் – உரிச்சொல்	17
2	நாகரிகம், தொழில், வணிகம்	வணிக வாயில்	32
		நான்மாடக்கூடல்	37
	தொழில் பல முனைதல்	மதுரைக்காஞ்சி	39
		சந்தை	42
		ஆகுபெயர்	48
		திருக்குறள் *	55
3	கலை, அழகியல், புதுமைகள்	சிற்பக்கலை	60
		இராவண காவியம் *	65
	கலை பல வளர்த்தல்	நாச்சியார் திருமொழி	69
		செய்தி	71
		புணர்ச்சி	76

(*) *இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

English Term II Pages 89 - 168

3YL9N5

மின் நூல்

4B9E6C

மதிப்பீடு

இணைய வளங்கள்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil _Term_II_FM_06_07_2018.indd 8 10-07-2018 11:54:41

இயல் ஒன்று

கசடற மொழிதல்

கற்றல் நோக்கங்கள்

- கல்வி, பெண்கள் முன்னேற்றத்தில் பெரும்பங்கு ஆற்றியுள்ளமையை உணர்ந்து பெண்கல்விக்குத் தம் பங்களிப்பை நல்குதல்
- பலவாறான இலக்கிய வடிவங்களின்வழி கருத்துகளைப் படித்து அறிதல்
- குறிப்பிட்ட தலைப்பின்கீழ் கருத்துகளைத் திரட்டிக் கோவையாக எழுதும் திறன் பெறுதல்
- நூலகத்தின் பயனறிந்து பயன்படுத்த முனைதல்
- இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றை எழுதுதலில் முறையாகப் பயன்படுத்துதல்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

இயல் ஒன்று

கல்வியில் சிறந்த பெண்கள்

நுழையும்முன்

கையிலுள்ள செல்வத்தைக்காட்டிலும் நிலைத்த புகழுடைய கல்விதான் ஒருவருக்கு வாழ்வின் இறுதிவரையிலும் கைகொடுக்கிறது. கல்வி பெறுதலே பெண்களுக்கு அழகு. சங்ககாலத்தில் உயர்ந்திருந்த பெண்கல்வி, இடைக்காலத்தில் ஒடுங்கிப்போனது. பெண்கல்வியை மீட்டெடுக்க உலகம் முழுவதும் சான்றோர் பலர் பாடுபட்டிருக்கின்றனர். மருத்துவர் முத்துலட்சுமி முதல் மலாலா வரை சாதனைப் பெண்கள் ஒவ்வொருவரின் வரலாற்றிலும் ஒரு சோதனைக் காலமும் ஒரு வேதனை முகமும் இருக்கின்றது. இனி, பெண்கல்வி காலூன்றிக் கடந்து வந்த பாதைகளில் நடந்து செல்லும் வில்லிசையைச் செவிமடுப்போம்.

வில்லுப்பாட்டு

பங்கு பெறுவோர்

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர், குழுவினர்

KAFFNJ

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர்: தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட

குழுவினர்: ஆமாம், வில்லினில் பாட

குழுத்தலைவர்: வந்தருள்வாய் தமிழ்மகளே!

குழுவினர்: ஆமாம், வந்தருள்வாய் தமிழ்மகளே!

அண்ணே, என்னண்ணே, இன்னைக்கு எதைப் பத்திப் பாடப்போறோம்?

குழுத்தலைவர்: நாடும் தாய்தான் நகரும் நதியும் தாய்தான் ... மொழியும் தாய்தான் சுழலும் புவியும் தாய்தான்

குழுவினர்: பீடிகை போடாம செய்திக்கு வாங்கண்ணே!

குழுத்தலைவர்: இப்படி எல்லாத்தையும் பெண்ணாகப் பார்த்து வணங்கற நாம எல்லாரும், வீட்டில் இருக்கும் பெண்ணை மதிக்கிறோமா?

குழுவினர்: அண்ணே... மதிக்க என்ன இருக்கு. எல்லார் வீட்டிலயும் இப்படித்தானே?

குழுத்தலைவர்: சரி, இதுவே ஒரு பெண் ஆட்சியர் வந்தா என்ன செய்வ?

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 2 10-07-2018 12:59:22

குழுவினர்: என்ன அண்ணே கேள்வி இது? உடனே எழுந்து நின்று வணக்கம் சொல்வேன்.

குழுத்தலைவர்: அப்போ, ஒரு பெண் படிச்சுப் பெரிய பதவிக்கு வரும்போது, தானா மரியாதை வருதுல்ல? அதான், இன்னிக்குப் பெண் கல்வியின் அவசியம் பத்தியும் கல்வியில் சிறந்த பெண்களைப் பத்தியும் பாடப்போறோம்.

படிக்க வேண்டும் பெண்ணே – அப்பத்தான்
பார்முழுதும் போற்றிடும் கண்ணே . . .
சுயமாகச் சிந்திக்கத் துணையாகும் கல்வி
சொந்தக்காலில் நின்றிடவே உடனுதவும் கல்வி...(படிக்க)

குழுவினர்: ஆமா, பார் முழுதும் போற்றிடும் கண்ணே.

ஆமாண்ணே, எனக்கொரு சின்ன ஐயம். அந்தக் காலத்தில எந்தப் பெண்ணைப் படிக்க வச்சாங்க? அப்பல்லாம் நாடு நல்லா இல்லையாண்ணே!

குழுத்தலைவர்: தம்பி, உனக்கு விவரம் பத்தாது. சொல்றேன் கேட்டுக்கோ.

கற்காலம் முதலே கனிந்திருந்த தமிழின்
பொற்காலம் எனவே புகழப்படும் காலம்
எக்காலம்? அது எக்காலம்?
பாட்டும் தொகையும் உருவான காலம்
ஊட்டும் தமிழுணர்வு உயர்ந்திருந்த காலம்
சங்ககாலம்... அது சங்ககாலம்...
ஔவையும் குயத்தியும் வெறிபாடிய கண்ணியும்
கொவ்வைத் தமிழைக் கொண்டு பாடிய மாசாத்தியும்
செழித்திருந்த காலம்... புகழ் வளர்த்திருந்த காலம்...

குழுவினர்: ஓகோ! சங்க காலத்தில் பெண்பாற் புலவர் பலர் இருந்ததச் சொல்றீங்களா அண்ணே, மேலே சொல்லுங்க. நானும் தெரிஞ்சுக்கணும். நம்ம மக்களும் தெரிஞ்சு நடந்துக்கட்டும்

தெரிந்து தெளிவோம்

சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர்:

பெண்பாற் புலவர்கள் வந்தாங்க...
பெண்ணுணர்வைப் பாடலில் தந்தாங்க...
தூது போனாங்க... துயரைத் தீர்த்தாங்க...
ஓதும் தமிழாலே உயர்வைப் பெற்றாங்க...

குழுவினர்: படிச்ச பெண்களுக்குக் கிடைச்ச பெருமையை இன்னும் சொல்லுங்கண்ணே!

குழுத்தலைவர்: சமண மதமும் புத்த மதமும் வளர்ந்த காலத்திலே, மாதவி மகள் மணிமேகலை கல்வி கற்ற பெண்ணாக இருந்தாங்க.

குழுவினர்: அப்படியா அண்ணே, வேற யாரெல்லாம் படிச்சுப் பெருமை அடைஞ்சாங்க?

குழுத்தலைவர்: பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முதலிய பெண்கள், தம் இறைவனுக்குப் பாமாலை சூட்டினாங்க.

குழுவினர்: ஆமாண்ணே நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, திரும்பவும் எனக்கொரு ஐயம். இவ்வளவு பெண்கள் படிச்சிருந்த நம்ம நாட்டில சில நூற்றாண்டுகளா ஏன் பெண்ணடிமைத்தனம் வந்துச்சு?

குழுத்தலைவர்: தம்பி நல்ல கேள்வி கேட்ட, சொல்றேன் கேளு.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 3 10-07-2018 12:59:22

ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பிலே
சமம் என்று நினைச்சாங்க – முன்னோர்கள்
சரியாக வாழ்ந்தாங்க...
இடையில் குடிபுகுந்த மூடப்பழக்கங்களால்
பெண்களைத் தாழ்த்தினாங்க – சமத்துவத்தை
அடியோடு வீழ்த்தினாங்க...

குழுவினர்: அது சரிண்ணே, இன்று பெண்கள் நல்லாப் படிச்சு உயர்ந்த பதவியெல்லாம் பெற்று நாட்டையே ஆளறாங்க. இந்த நிலை எப்படிண்ணே வந்தது?

குழுத்தலைவர்: அது, ஒரு நூற்றாண்டு கால வரலாறு தம்பி. இந்த நிலையை அடைய அவங்க பட்டபாடு சொல்லி முடியாது.

குழுவினர்: அதைத்தான், கேட்கறேன் விரிவாகச் சொல்லுங்கண்ணே!

குழுத்தலைவர்:
அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதுக்கு என்று
ஆணவமாக் கேட்டவங்க மத்தியிலே
குழுவினர்: ஆமா மத்தியிலே

குழுத்தலைவர்: தமிழகத்தின் முதல் பெண் மருத்துவராய், சாதனை படைச்சாங்க முத்துலெட்சுமி

குழுவினர்: ஆமா! முத்துலெட்சுமி

அடடா! என்ன அருமையான செய்தி. அவங்க வேற என்னெல்லாம் செய்தாங்கண்ணே?

குழுத்தலைவர்:

பொதுச்சேவைக்கு வந்தாங்க புதுமையைப் படைச்சாங்க
சட்டசபை உறுப்பினராய்ச் சரித்திரமாய் நின்னாங்க
மகளிருக்கெதிரான கொடுமைகளை மாண்புடனே எதிர்த்தாங்க
மனிதகுலத்தின் மாணிக்கமாய் மக்கள்மனங்களில் நிறைந்தாங்க

பெண்மை – புரட்சி

முத்துலெட்சுமி (1886 – 1968)

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்

இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

குழுவினர்: என்ன இருந்தாலும் படிச்சவங்க படிச்சவங்கதான்.

குழுத்தலைவர்: அவங்களைப் போலவே மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் நல்லா படிச்சவங்க. சமூக சேவகியா இருந்து பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டாங்க.

குழுவினர்: இன்னும் வேறு யாரெல்லாம் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டாங்க அண்ணே?

குழுத்தலைவர்: சொல்றேன் கேளு தம்பி ...

முடியாது பெண்ணாலே என்கின்ற மாயையினை முடக்க எழுந்தவர் யாரு...
தந்தை பெரியாரு
விடியாது பெண்ணாலே என்கின்ற கேலியினை மிதித்துத் துவைத்தவர் யாரு...
நம்ம பாரதியாரு ...
பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீருமோவென

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 4 10-07-2018 12:59:23

இடிமுழக்கம் செய்தவர் யாரு...

பாரதிதாசனாரு ...

குழுவினர்: இவ்வளவு சேதி கேட்ட நாங்க, பெண் கல்விக்காக நமது அரசாங்கம் என்னென்ன செய்தது என்பதையே கேட்க மறந்து விட்டோம் அண்ணே!

குழுத்தலைவர்: பெண்கல்வி மேம்பாட்டிற்குத் தற்போதைய அரசு மட்டுமல்ல, ஆங்கில அரசே சட்டங்கள் போட்டது தம்பி.

குழுவினர்: என்னண்ணே சொல்றீங்க! நம்ப முடியல. ஆங்கில அரசு சட்டம் போட்டதா? புரியும்படி சொல்லுங்க!

குழுத்தலைவர்: தம்பி 1882இல் ஹண்டர் குழு முதன்முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது. அந்த அறிக்கையின்படி மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினாங்க.

குழுவினர்: இது புதிய செய்தியா இருக்கே!

குழுத்தலைவர் : அதன் பிறகு, பெண்கள் கல்வி பயில, பல உயர்கல்வி நிறுவனங்களை அரசு உருவாக்குச்சு.

பெண்மை – துணிவு

மூவலூர் இராமாமிர்தம் (1883 – 1962)

தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்.; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். தமிழக அரசு, 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

பெண்மை – உயர்வு

பண்டித ரமாபாய் (1858 – 1922)

இவர் சமூகத் தன்னார்வலர். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

குழுவினர்: ஆங்கில அரசு பத்திச் சொன்னீங்க சரி, விடுதலைக்குப் பின் நமது மத்திய, மாநில அரசுகள் பெண் கல்விக்காக என்ன செய்தன அண்ணே!

குழுத்தலைவர்: அதைச் சொல்லாம விடுவேனா தம்பி?

கற்க வேண்டும் பெண்கள் என்று முழங்கியது அரசாங்கம்

கற்பதனாலேயே நம்நாட்டின் நிலையோங்கும்

பெண்கள் பள்ளிக்கூடங்கள் திறந்தார்கள்

பெண்களும் கல்வி கற்று உயர்ந்தார்கள்....

குழுவினர்: நமது தமிழக அரசு நல்ல திட்டங்களையே தந்திருக்குது அண்ணே.

பெண்மை – சிறப்பு

ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் (1870–1960)

பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில், தமிழகத்திற்கு வந்து, மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 5 10-07-2018 12:59:23

குழுத்தலைவர்: ஆமா ஆமா. அரசுத் திட்டங்கள் மட்டுமல்ல; தனிமனிதப் பங்களிப்பும் இருக்கு தம்பி. இந்தியாவில் குழந்தையைப் பாதுகாப்போம் என்ற அமைப்பை நிறுவி, இதுவரைக்கும் 80ஆயிரம் குழந்தைகள் கல்விபெற உதவியா ஒருத்தர் இருந்திருக்காரு.

குழுவினர்: அப்படிப்பட்ட பெருமைக்குரியவர் யாரு அண்ணே?

குழுத்தலைவர்: 2014இல் நோபல் பரிசு வாங்கின பெருமைக்குரியவரு. அவர்தான் நம்ம கைலாஷ் சத்யார்த்தி.

குழுவினர்: எவ்வளவோ செய்திகளை இன்னைக்குச் சொன்னீங்க, இன்னும் ஏதாவது?...

குழுத்தலைவர்: ஏன் தம்பி! இழுக்கற. சொல்றேன் கேளு! பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி அதற்காகப் போராடிய வீரச்சிறுமி மலாலா "நோபல் பரிசு" வாங்கினாங்க தெரியுமோ!

குழுவினர்: ஆமாண்ணே நான் கூடக் கேள்விப்பட்டேன்.

குழுத்தலைவர்: இவ்வளவு நேரம் என்னுடைய வில்லுப்பாட்டால என்ன தெரிஞ்சுக்கிட்ட தம்பி. மக்களுக்குச் சுருக்கமாகச் சொல்லு!

யார் இவர்?

பாகிஸ்தானில், பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது பன்னிரண்டு (1997).

பெண்மை – அறிவு

சாவித்திரிபாய் பூலே (1831 – 1897)

1848இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

குழுவினர் :

பெண்கள் படிக்கணும் நாட்டின் கண்கள் திறக்கணும்
இன்னும் படிக்கணும் உயர்வு என்றும் விளையணும்
ஆணும் பெண்ணும் சரிநிகரென்னும் அறிவு வளரணும்
அன்பினாலே அகிலம் பூக்கும் உண்மை புரியணும்... (பெண்கள்)

குழுத்தலைவர்: பரவாயில்லை நல்லாவே புரிஞ்சுக்கிட்ட தம்பி. இத்தனை போராட்டங்களுக்குப் பிறகுதான் இன்று பெண்கள் அதிகமாகக் கல்வி கற்க வாராங்க. உயர்கல்வி கற்று எல்லாத் துறைகளிலும் பணியாற்றித் திறமையாகச் செயல்படுறாங்க.

குழுவினர்: அடடே! இது எவ்வளவு பெரிய சேதி அண்ணே! என்னண்ணே...நீங்க சொன்னதைக் கேட்டுக்கிட்டே இருந்ததாலே நேரம் போனதே தெரியல.

குழுத்தலைவர்: சரி சரி. அப்படின்னா மங்களம் பாடிடுவோம்!

அனைவரும்:

வாழியவே பெண்மை வாழியவே
வளமான பெண்கல்வி வாழியவே
சமத்துவம் வாழியவே
புவி வளம் பெறவே
புதிய உலகம் நலம்பெறவே
(வாழியவே பெண்மை வாழியவே)

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 6 10-07-2018 12:59:23

தெரிந்து தெளிவோம்

பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்

ஈ.வெ.ரா. – நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.

சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது. காண்க: tavikaspedia.in

தனித் தமிழில் சிறந்த நீலாம்பிகை அம்மையார் (1903 – 1943)

மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல்–தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

கோத்தாரி கல்விக் குழு

1964ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

சாரதா சட்டம்

பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் (1906 –1955)

தமிழ், இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

கற்பவை கற்றபின்...

1. *இன்றைய சாதனைப் பெண்மணிகள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.*
2. *கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.*

தொடர்கள்

- *கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு*
- *கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி*
- *கல்வி கரையில கற்பவர் நாள்சில*
- *கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு*
- *கல்வியழகே அழகு*

KAPBQ7

பொன்மொழிகள்

- *கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சுவரை பிறருக்குக் கொடுக்கத்தான்.*
- *எடுத்தால் குறைவது செல்வம், கொடுத்தால் வளர்வது கல்வி.*
- *கல்வி ஓர் அணிகலன். அணிந்தால் அழகு தரும், அணிவித்தால் சிறப்பினைத் தரும்.*

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 7 10-07-2018 12:59:23

கவிதைப் பேழை

இயல் ஒன்று

குடும்ப விளக்கு

நுழையும்முன்

புதுமைக் கருத்துகளை இயம்பும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்தவையே மறுமலர்ச்சி இலக்கியங்கள். இயற்கையைப் போற்றுதல், தமிழுணர்ச்சி ஊட்டுதல், பகுத்தறிவு பரப்புதல், பொதுவுடைமை பேசுதல், விடுதலைக்குத் தூண்டுதல், பெண்கல்வி பெறுதல் போன்ற பாடுபொருள்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, பாவேந்தர் பாரதிதாசனின் குடும்பவிளக்கு.

1. *கல்வி இல்லாத பெண்கள்*
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
விளைவது நவில வோநான்!

சொல்லும் பொருளும்:

களர்நிலம் – உவர்நிலம்,
நவிலல் – சொல்லல்.

2. *வானூர்தி செலுத்தல் வைய*
மாக்கடல் முழுது மளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
அனைவர்க்கும் பொதுவே! இன்று
நானிலம் ஆட வர்கள்
ஆணையால் நலிவு அடைந்து
போனதால் பெண்களுக்கு
விடுதலை போனது அன்றோ!

சொல்லும் பொருளும்:

வையம் – உலகம்;
மாக்கடல் – பெரிய கடல்,

3. *இந்நாளில் பெண்கட்கு எல்லாம்*
ஏற்பட்ட பணியை நன்கு
பொன்னேபோல் ஒருகை யாலும்
விடுதலை பூணும் செய்கை
இன்னொரு மலர்க்கை யாலும்
இயற்றுக! கல்வி இல்லா
மின்னாளை வாழ்வில் என்றும்
மின்னாள் என்றே உரைப்பேன்! *

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 8 10-07-2018 12:59:23

சொல்லும் பொருளும்: இயற்றுக – செய்க; மின்னாளை – மின்னலைப் போன்றவளை; மின்னாள் – ஒளிரமாட்டாள்.

4. *சமைப்பதும் வீட்டு வேலை*
சலிப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கே ஆம் என்று கூறல்
சரியில்லை; ஆடவர்கள்
நமக்கும் அப் பணிகள் ஏற்கும்
என்றெண்ணும் நன்னாள் காண்போம் !
சமைப்பது தாழ்வா ? இன்பம்
சமைக்கின்றார் சமையல் செய்வார்!

5. *உணவினை ஆக்கல் மக்கட்கு!*
உயிர்ஆக்கல் அன்றோ? வாழ்வு
பணத்தினால் அன்று! வில்வாள்
படையினால் காண்ப தன்று!
தணலினை அடுப்பில் இட்டுத்
தாழியில் சுவையை இட்டே
அணித்திருந் திட்டார் உள்ளத்(து)
அன்பிட்ட உணவால் வாழ்வோம்!

சொல்லும் பொருளும்: தணல் – நெருப்பு; தாழி – சமைக்கும் கலன்; அணித்து – அருகில்.

6. *சமைப்பது பெண்க ளுக்குத்*
தவிர்க்கஒணாக் கடமை என்றும்
சமைத்திடும் தொழிலோ, நல்ல
தாய்மார்க்கே தக்கது என்றும்
தமிழ்த்திரு நாடு தன்னில்
இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப் போதில் நீக்கவேண்டில்
பெண்கல்வி வேண்டும் யாண்டும்!

சொல்லும் பொருளும்: தவிர்க்கஒணா – தவிர்க்க இயலாத; யாண்டும் – எப்பொழுதும்.

பாடலின் பொருள்

1. கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவைதான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல கல்வியறிவு இல்லாத பெண்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள். கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

2. வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

3. இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும் அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன்.

4. சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

5. உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். "வாழ்க்கை" என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று. அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம்பெறுகிறது.

6. சமைக்கும் பணி, பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும் அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 9 10-07-2018 12:59:23

இலக்கணக்குறிப்பு

மாக்கடல் – உரிச்சொல்தொடர்;

ஆக்கல் – தொழில்பெயர்;

பொன்னேபோல் – உவம உருபு;
மலர்க்கை – உவமைத்தொகை;

வில்வாள் – உம்மைத்தொகை;

தவிர்க்கஒணா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்

விளைவது = விளை + வ் +அ + து

விளை – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; அ – சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

சமைக்கின்றார் = சமை + க் + கின்று + ஆர்

சமை – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

நூல் வெளி

குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது; குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும். இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.

பாரதிதாசனின் இயற்பெயர் கனக.சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள். இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்...

1. *பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் – *பாரதி*

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா.... – *கவிமணி*

பெண்எனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது – *பாவேந்தர்*

இவை போன்ற பெண்மையைப் போற்றும் கவிதை அடிகளைத் திரட்டுக.

2. *ஆணுக்கும் சமையல் செய்யத் தெரிந்திருப்பதன் பயன் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி அதன் கருத்துகளைத் தொகுக்க.*

KB83TH

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 10 10-07-2018 12:59:24

கவிதைப் பேழை

இயல் ஒன்று

சிறுபஞ்சமூலம்

KBGYV5



மனித வாழ்வைச் செழுமையாக்குபவை அறப் பண்புகளே. காலந்தோறும் தமிழில் அறக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் சிறுபஞ்சமூலம் என்னும் நூல். வயதுக்கும் அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. சாதனைக்கு வயது ஒரு தடையில்லை.

அறிவுடையார் தாமே உணர்வர்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.* (பா. எண்: 22)

பாடலின் பொருள்

பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு. இதைப் போலவே நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர், வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார். பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர்.

அணி : பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

சொல்லும் பொருளும்

மூவாது – முதுமை அடையாமல்; நாறுவ – முளைப்ப, தாவா – கெடாதிருத்தல்

இலக்கணக் குறிப்பு

அறிவார், வல்லார்– வினையாலணையும் பெயர்கள்

விதையாமை, உரையாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்கள்

தாவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

உரையாமை = உரை + ய் + ஆ + மை

உரை – பகுதி; ய் – சந்தி (உடம்படுமெய்)

ஆ – எதிர்மறை இடைநிலை

மை – தொழிற்பெயர் விகுதி

காய்க்கும் = காய் + க் + க் + உம்

காய் – பகுதி; க் – சந்தி; க் – எதிர்கால இடைநிலை; உம் – பெயரெச்ச விகுதி

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 11 10-07-2018 12:59:24

நூல் வெளி

தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

தெரிந்து தெளிவோம் — சாதனைக்கு வயது தடையன்று

10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.

11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.

15ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.

16ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.

17ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் அறிவியலாளர் கலீலியோ.

தெரியுமா?

சிறுபஞ்சமூலத்தின் ஒரு பாடலில் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அது போல, ஒரு பாடலில் மூன்று, ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன. அந்நூல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

கற்பவை கற்றபின்...

1. *பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.*
2. *மூவாது மூத்தவர், காணாது கண்டவர்*
   இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக.

KBQUHS

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 12 10-07-2018 12:59:24

விரிவானம்

இயல் ஒன்று

வீட்டிற்கோர் புத்தகசாலை

KBZQYF

நுழையும்முன்

"நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்" என்பார் ஆபிரகாம் லிங்கன். மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும்தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று, நூல்களும்தான். உலகமெங்கும் பயணம் செல்லும் பட்டறிவை நூலுலகம் தருகிறது. நல்ல நண்பனைப் போன்ற நூலையும், நல்ல நூலைப் போன்ற நண்பனையும் தேடிப் பெறவேண்டும். இசையைப் போன்றே இதயத்தைப் பண்படுத்துவன நூல்களே. ஆதலின் வீட்டிற்கோர் புத்தகசாலை என்றும் தேவை. இதை வலியுறுத்தும் வகையில் அறிஞர் அண்ணாவின் வானொலி உரை இடம்பெறுகிறது.

உலகிலே எங்கேனும் ஓரிடத்தில் ஏதோ ஓர் காரணத்தால் நேரிடும் ஏதோ ஓர் சம்பவம், உலகின் மற்ற பாகங்களைப் பாதிக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம். உலகத் தொடர்பு அதிகரித்துவிட்ட, வளர்ந்துகொண்டே போகும் நாட்களிலே நாம் வாழ்கிறோம்.

நாட்டுநிலை, உலகநிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டுநிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியம், நாட்டுக்கோர் நல்லநிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை. மலை கண்டு, நதி கண்டு, மாநிதி கண்டு அல்ல, ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே. மாநிலம் மதிக்கும் மனவளம் வேண்டும்.

எழுத்தறிவற்றவர் ஏராளம் இந்நாட்டில். இது பெருங்கேடு. கல்வி பெற்றவர்கள் அனைவருக்குமாவது மனவளம் இருக்கிறதா?

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 13 10-07-2018 12:59:25

அவர்களின் வீடுகளாவது நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துகள் மலரும் சோலையாக உள்ளனவா என்றால், இல்லை என்று பெருமூச்சுடன் கூறித்தான் ஆகவேண்டும். உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டுநிலை கண்டு உலகம் மதிக்கவேண்டுமானால், இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்றுச் சிரமப்பட்டால், நமது நாட்டிலே நிச்சயமாக மனவளத்தைப் பெறமுடியும். நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன.

அவர்களின் காலம் அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம்; ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம்; மனவளத்தை அதிகப்படுத்தும் மார்க்கம் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

இதோ நான் பேசுகிறேன். நீங்கள் கேட்கிறீர்கள். இடையே பலப்பல மைல்கள். இந்த ஒலி கேட்பது அறிவின் துணைகொண்டு.

தெரியுமா?

2009 ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது. 2010ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வதிசயச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள் நமது முன்னோர்கள் காலம். இவ்வளவு வசதிகள் நமக்கிருக்கிறது. ஏன், மனவளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே, மனவளத்தை அதிகரிக்கவோ பாதுகாக்கவோ நாம் முயற்சி செய்வதில்லை; வழிவகை தேடிக் கொள்வதில்லை.

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும். பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச்செம்பும் இருக்கும். பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூடப் புத்தகசாலை இராது.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும் போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை–அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தகசாலைக்குத் தரப்படவேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும். மக்களின் மனத்திலே உலக அறிவு புக வழிசெய்ய வேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள்கூட

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 14 10-07-2018 12:59:26

இன்றும் நிலைபெற்றுள்ள பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் சில

1. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
2. கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
3. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
4. சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
5. மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை; தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை; தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
6. நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
7. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
8. இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
9. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

அல்ல, அடிப்படை உண்மைகளாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விஷேசங்களின்போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது புத்தகங்கள் வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக்கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தகசாலையை அமைத்துவிடலாம். உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும்.

பூகோள, சரித ஏடுகள் இருக்க வேண்டும். நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்கவேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கியச் சாரத்தைச் சாமானியரும் அறிந்து வாசிக்கக் கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்கவேண்டும். குறைந்தபட்சம் மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல்கள் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலைதேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக்கொண்டால், நாட்டுக்கு நல்லநிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை. கேட்டினை நீக்கிட, தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்கவேண்டும், வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

நூலகப் பயன்பாட்டிற்கான இணையத்தளங்கள்

http:www.tamilvu.org,http:www.thamizham.net,www.projectmadurai.com

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 15 10-07-2018 12:59:26

நூல் வெளி

வீட்டிற்கோர் புத்தகசாலை என்னும் இப்பகுதி பேரறிஞர் அண்ணாவின் வானொலி உரைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைத்தனர். இவர் சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்பஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர். அவரது பல படைப்புகள் திரைப்படங்களாயின. தம்முடைய திராவிடச் சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் இவரே. 1935இல் சென்னை, பெத்தநாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார். ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார். முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார். சென்னை மாகாணத்தைத் 'தமிழ்நாடு' என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்

அண்ணாவின் சிறுகதைத் திறன் – ப.373 – முனைவர் பெ. குமார்.

தெரிந்து தெளிவோம்

புகழுக்குரிய நூலகம்

ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன.

உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.

இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது, திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.

கொல்கத்தாவில் 1836ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.

உலகின் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

கற்பவை கற்றபின்...

1. *வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்படவேண்டும்! – அறிஞர் அண்ணா*

   உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! – கதே

   இவை போன்ற பொன்மொழிகளை எழுதி வகுப்பறையில் படித்துக் காட்டுக.

   KC9M13

2. *சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக.*

3. *நூலகத்தில் கவிதை, கதை முதலிய நூல்களை நூலாசிரியர் வரிசையிலும் நூலின் அடையாளக் குறியீட்டு எண் அடிப்படையிலும் எவ்வாறு தேடுவது என்பதைத் தெரிந்துகொள்க.*

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 16 10-07-2018 12:59:26

இயல் ஒன்று

இடைச்சொல் – உரிச்சொல்



சுசீலா, அவளுடைய தோழி கமீலாவின் வீட்டுக்குப் போனாள். கமீலாவும் சுல்தானும் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சுல்தானைவிடக் கமீலா இரண்டு ஆண்டுகள் பெரியவள். ஆனால் உருவத்தில் சுல்தான்தான் அண்ணனைப் போல இருப்பான். சுசீலாவைக் கண்டவுடன் கமீலா மகிழ்ச்சியடைந்தாள்.

KCII2Q

மேற்கண்ட பகுதியில் இடைச் சொற்களை இனம் காண முடிகிறதா?

இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை இடைச் சொற்கள்.

பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப்போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

இடைச் சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

இடைச்சொல் பலவகையாக அமையும்.

இடைச்சொற்களின் வகைகள்

வேற்றுமை உருபுகள்	ஐ, ஆல், கு, இன், அது, கண்
பன்மை விகுதிகள்	கள், மார்
திணை, பால் விகுதிகள்	ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அ
கால இடைநிலைகள்	கிறு, கின்று,...
பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள்	அ, உ, இ, மல்,...
எதிர்மறை இடைநிலைகள்	ஆ, அல், இல்
தொழிற்பெயர் விகுதிகள்	தல், அம், மை
வியங்கோள் விகுதிகள்	க, இய
சாரியைகள்	அத்து, அற்று, அம்,...
உவம உருபுகள்	போல, விட, காட்டிலும், மாதிரி
இணைப்பிடைச் சொற்கள்	உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்,...

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 17 10-07-2018 12:59:26

இடைச்சொற்களின் வகைகள்

தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள்	உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்
சொல்லுருபுகள்	மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை
வினா உருபுகள்	ஆ, ஓ

இவற்றுள் உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உம்

'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை)

பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு)

ஓ

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.

தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை - அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

- இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)
- பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)
- பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை - அதுவும் இல்லை)

ஏ

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.

நடந்தே வந்தான்.

தான்

'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.

வேறுபாட்டை உணருங்கள்:

நிர்மலாதான் பாடினாள். (தான் - இடைச்சொல்)

நிர்மலா தானும் பாடினாள். (தான் - தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் - பெயர்ச்சொல்)

மட்டும்

இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.

படிப்பு மட்டும் இருந்தால் போதும். (வரையறைப் பொருள்)

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 18 10-07-2018 12:59:26

ஆவது

இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

• ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)

• அவனாவது, இவனாவது செய்து முடிக்கவேண்டும். (இது அல்லது அது)

முதலாவது, இரண்டாவது, ... (வரிசைப்படுத்தல்)

கூட

• என்னிடம் ஒரு காசுகூட இல்லை. (குறைந்தபட்சம்)

• தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. (முற்றுப் பொருள்)

• அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)

ஆ

வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.

ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

ஆம்

சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

உள்ளே வரலாம். (இசைவு)

இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்)/செய்தி

பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி

தெரிந்து தெளிவோம்

அன்று என்பது ஒருமைக்கும்

அல்ல என்பது பன்மைக்கும் உரியன.

(எ.கா.) இது பழம் அன்று.

இவை பழங்கள் அல்ல.

எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்

எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்

(எ.கா.) எத்தனை நூல்கள் வேண்டும்?

எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது.

உரிச்சொற்கள்

உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை. ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச் சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

கடி மலர் – மணம் மிக்க மலர் கடி நகர் – காவல் மிக்க நகர் கடி விடுதும் – விரைவாக விடுவோம் கடி நுனி – கூர்மையான நுனி	ஒரு சொல் பல பொருளுக்கு உரியது
உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன. உறு பசி; தவச் சிறிது; நனி நன்று	பல சொல் ஒரு பொருள்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 19 10-07-2018 12:59:27

உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும் அவை

1) ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு

2) பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு

மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. பிற உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

கற்பவை கற்றபின்...

KCSE4D

1) பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

அ) பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெறவேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

ஆ) நமது முன்சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

2) உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.

3) பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.

அ) மணற்கேணி__ ப்போல் விளங்கும் நூல்__ உறுதுணை__ இருக்கிறது.

ஆ) பெண்கள்__ ப்படிக்க வைக்காத காலத்தில்__ பெண் இனம்__ பெருமை சேர்க்கும்படி__ நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவர்__ வந்தார்கள்.

இ) மக்கள்__ மனம்___ உலக அறிவுபுக வழிசெய்ய வேண்டும்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 20 10-07-2018 12:59:27

4) இணைத்து எழுதிப் பாருங்கள்.

அவன்	தான் உம் ஏ ஆ	மனிதன்
இயற்கை		அழகு

உனக்கு	மட்டும் கூட ஆவது	தெரியுமா?
		தெரியும்

வீடு, நாடு	உம் ஓ	நமதே
காற்று, வெளிச்சம்		தேவை
அன்பு, அமைதி		வேண்டும்
வான்மதி, பானு		வாருங்கள்

5) பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) _________ பெரும் பொதுக் கூட்டம் (கடி, மா)

ஆ) ________ விடுதும் (உறு, கடி)

இ) ________ நுதல் (வாள், தவ)

ஈ) _________ சிறந்தது (சால, மழ)

உ) _________ மனை (கடி, தட)

சிந்தனை வினா

1) "தான்" என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

2) அவர்களுக்குப் பரிசு தருவேன் – இத்தொடரில் "ஆ" என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.

3) செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம்பெறுகின்றன?

4) தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.

5) 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக.

6) இடைச் சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.

அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?

ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண்,பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?

உ) பூக்காமலே சில மரங்களில் காய்ப்பதுண்டு.

ஊ) வாளால் வெட்டினான்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 21 10-07-2018 12:59:27

பகுபத உறுப்பிலக்கணம்

பதம்(சொல்) இருவகைப் படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

பகுதி (முதனிலை)	சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.
விகுதி (இறுதிநிலை)	சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டும்.
இடைநிலை	பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்.
சந்தி	பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.
சாரியை	பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.
விகாரம்	தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்.

பகுதி:

ஊரன் – ஊர், வரைந்தான் – வரை

நடிகன் – நடி, மடித்தார் – மடி

பார்த்தான் – பார், மகிழ்ந்தாள் – மகிழ்

விகுதி:

படித்தான்	ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி	அன், ஆன்
பாடுகிறாள்	ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி	அள், ஆள்
பெற்றார்	ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி	அர், ஆர்
நீந்தியது	து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி	து, று
ஓடின	அ – பலவின்பால் வினைமுற்று விகுதி	அ, ஆ
சிரிக்கிறேன்	ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி	என், ஏன்
உண்டோம்	ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி	அம், ஆம், எம், ஏம், ஓம்
செய்தாய்	ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி	ஐ, ஆய், இ
பாரீர்	ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி	இர், ஈர்
அழகிய, பேசும்	அ, உம் – பெயரெச்ச விகுதிகள்	அ, உம்
வந்து, தேடி	உ, இ – வினையெச்ச விகுதிகள்	உ, இ
வளர்க	க – வியங்கோள் வினைமுற்று விகுதி	க, இய, இயர்
முளைத்தல்	தல் – தொழிற்பெயர் விகுதி	தல், அல், ஐ, கை, சி, பு...

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 22 10-07-2018 12:59:27

இடைநிலைகள்

வென்றார்	ற்-இறந்தகால இடைநிலை	த், ட், ற், இன்
உயர்கிறான்	கிறு – நிகழ்கால இடைநிலை	கிறு, கின்று, ஆநின்று
புகுவான், செய்கேன்	வ், க் – எதிர்கால இடைநிலைகள்	ப், வ், க்
பறிக்காதீர்	ஆ – எதிர்மறை இடைநிலை	இல், அல், ஆ
மகிழ்ச்சி, அறிஞன்	ச், ஞ் – பெயர் இடைநிலைகள்	ஞ், ந், வ், ச், த்

சந்தி

உறுத்தும்	த் – சந்தி	த், ப், க்
பொருந்திய	ய் – உடம்படுமெய் சந்தி	ய், வ்

சாரியை

நடந்தனன்	அன் – சாரியை	அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன்

எழுத்துப்பேறு

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

எடுத்துக்காட்டுகள்

வந்தனன்: வா(வ) + த் (ந்) + த் + அன் + அன்

வா – பகுதி ('வ' ஆனது விகாரம்)
த்(ந்) – சந்தி ('ந்' ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
அன் – சாரியை
அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

செய்யாதே: செய் + ய் + ஆ + த் + ஏ

செய் – பகுதி
ய் – சந்தி
ஆ – எதிர்மறை இடைநிலை
த் – எழுத்துப்பேறு
ஏ – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 23 10-07-2018 12:59:27

மதிப்பீடு

KD2A61

பலவுள் தெரிக.

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) சிறுபஞ்சமூலம்	–	1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு	–	2. சங்க இலக்கியம்
இ) சீவகசிந்தாமணி	–	3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை	–	4. தற்கால இலக்கியம்.

(க) அ–3, ஆ– 4, இ –1, ஈ– 2   (உ) அ– 2, ஆ– 3, இ– 1, ஈ– 4

(ங) அ– 3, ஆ–1, இ– 4. ஈ –2   (ச) அ– 4, ஆ –1, இ – 2, ஈ– 3

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

அ) கலைக்கூடம்	ஆ) கடி
திரையரங்கம்	உறு
ஆடுகளம்	கூர்
அருங்காட்சியகம்	கழி
இ) வினவினான்	ஈ) இன்
செப்பினான்	கூட
உரைத்தான்	கிறு
பகன்றான்	அம்பு

3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.

ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?

இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!

ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 24 10-07-2018 12:59:27

ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.

இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

1. ஆ, இ சரி; அ தவறு
2. அ, இ, சரி; ஆ தவறு
3. மூன்றும் சரி
4. மூன்றும் தவறு

5. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை

ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை

ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

குறுவினா

1. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
2. மூவாது மூத்தவர், நூல் வல்லார்- இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.
3. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?
4. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

சிறுவினா

1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
2. சமைப்பது தாழ்வா? இன்பம்
   சமைக்கின்றார் சமையல் செய்வார்.

   அ) இன்பம் சமைப்பவர் யார்?

   ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?
3. விதைக்காமலே முளைக்கும் விதைகள் -இத்தொடரின்வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.
4. இன்றைய பெண்கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.
5. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
6. நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.

நெடுவினா

1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.
2. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.
3. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 25 10-07-2018 12:59:27

மொழியை ஆள்வோம்

ஒப்பிட்டுச் சுவைப்போம்.

பாப்பா பாட்டு	Child's Song
ஓடி விளையாடு பாப்பா, – நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா, கூடி விளையாடு பாப்பா, – ஒரு குழந்தையை வையாதே பாப்பா.	*Run about and play my sweet little Child* *And idle not sweet little child;* *In game and sport have many mates* *And revile not any one child.*
காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு – என்று வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.	*Rise at dawn to learn your lesson,* *Then sing such airs that are soothing,* *To games devote the whole evening,* *Get habituated thus, oh child!*

மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"

Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".

"How can you be so sure?" asked Akbar.

Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".

Akbar was pleased very much by Birbal's wit.

பிழை நீக்கி எழுதுக.

1. மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்
3. பவளவிழிதான் பரிசு உரியவள்.
4. துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. குழலியும் பாடத் தெரியும்.

இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

(எ.கா.) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

1. அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
2. சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.
3. பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.
4. கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 26 10-07-2018 12:59:27

விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

> புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!
>
> **புத்தகத் திருவிழா**
>
> நாள் – செப்டம்பர் 19 முதல் 28 வரை
>
> இடம் – சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
>
> நேரம் – காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை.
>
> (முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.)
>
> (நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.)
>
> அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

நிகழ்வினைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.

அண்ணாவின் வாழ்க்கையில்...

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே திறந்துகாட்டச் செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று," தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் " என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம், " இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக்கொள்ளுங்கள் "என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, " நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப்போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வரவேண்டும் . அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றார்.

1. மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?
2. அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக்கொள்ளச் சொன்னார்?
3. அண்ணா, வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?
4. பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக.
5. நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 27 10-07-2018 12:59:27

மொழியோடு விளையாடு

சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக

மாணவர்கள்	ஆசிரியர்	பாடவேளை	கரும்பலகை
புத்தகம்	எழுதுகோல்	அழிப்பான்	வழிபாட்டுக் கூட்டம்
அறை	கல்லூரி	உயர்நிலை	சீருடை
மடிக்கணினி			

எ. கா. வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.

அகராதியில் காண்க.

அரங்கு, ஒட்பம், கான், நசை, பொருநர்

படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர்தண்ணீர்)

1. நா. காமராசனின் கவிதை நூல் ...

....

2. திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடகநூல்.



....

4. நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறுநாவல்



....

5. சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற சிற்பியின் கவிதை நூல்

....

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 28 10-07-2018 12:59:27

6. எஸ். ராமகிருஷ்ணனின் சிறார் நாவல்.

....

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



....

....

....

....

....

கடிதம் எழுதுக.

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்- தமிழ் -ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

செயல்திட்டம்

பெண்கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பற்றிய செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.

நிற்க அதற்குத் தக

எனக்குப் பிடித்தவை / என் பொறுப்புகள்

1. என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும்.

   எவரையும் காயப்படுத்தாமல் நடந்துகொள்வது, குறைகூறாமல் பேசுவது என் பொறுப்பு.

2. எனக்குப் படம் வரைவது பிடிக்கும்.
   பள்ளிச்சுவர், வீட்டுச்சுவர், பொதுச்சுவர் ஆகியவற்றில் வரையாமல் எழுதாமல் இருப்பதோடு பிறரையும் அவ்வாறு செய்யவிடாமல் தடுப்பது என் பொறுப்பு.

கலைச்சொல் அறிவோம்

சமூக சீர்திருத்தவாதி – Social Reformer

தன்னார்வலர் – Volunteer

களர்நிலம் – Saline Soil

சொற்றொடர் – Sentence

அறிவை விரிவு செய்

ஒய்ந்திருக்கலாகாது – கல்விச் சிறுகதைகள் (தொகுப்பு: அரசி –ஆதிவள்ளியப்பன்)

முதல் ஆசிரியர் – சிங்கிஸ் ஐத்மாத்தவ்

கல்வியில் நாடகம் – பிரளயன்

மலாலா – கரும்பலகை யுத்தம்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 29 10-07-2018 12:59:28

இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/courses/degree/d051/d0514/html/d05142l5.htm
http://tamilvu.org/courses/degree/a051/a0514/html/a051435.htm
http://www.annavinpadaippugal.info/sorpozhivugal/delhiyil_muthal_muzhakkam_1.htm
http://www.tamilvu.org/courses/degree/a021/a0213.pdf
http://www.tamilvu.org/courses/degree/a051/a0512/html/a0512315.htm

இணையச் செயல்பாடுகள்

Pongutamil

சிதறியதைச் சேகரிப்போமா!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி pongutamil என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன் மேகங்களுக்கு மத்தியில் பூட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கும் . அதில் முதலாவதைத் தெரிவு செய்துகொள்ளவும்.
- திரையின் பின் மெலிதாய்த் தோன்றும் படத்தின் மேல் சிதறிக் கிடக்கும் படங்களை ஒன்று சேர்த்து உண்மையான வடிவத்தை உருவாக்குக.
- எடுத்துக்காட்டாகத் தமிழரின் நீர் மேலாண்மையை உணர்த்தும் கல்லணைப் படத்தை ஒன்று சேர்க்க .





செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.EL4.PonguTamil

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 30 10-07-2018 12:59:28

இயல் இரண்டு

தொழில் பல முனைதல்

கற்றல் நோக்கங்கள்

- தமிழரின் பண்டைய துறைமுகங்கள், வணிகச்சிறப்பு ஆகியவற்றின் இன்றியமையாமையை உணர்ந்து இன்றைய வணிகத்துடன் ஒப்பிடல்
- சங்ககால மதுரைநகரக் காட்சிகளை இலக்கியங்கள்வழி அறிதல்
- நாட்டுப்புறப் பாடலின் வடிவத்தை அறிந்து சந்தப் பாடல்களைப் படைத்தல்
- நிகழ்வுகளை எழுத்தில் வருணனையாக வெளிப்படுத்தும் திறன் பெறுதல்
- மொழிப் பயன்பாட்டில் ஆகுபெயர் எவ்விதம் வெளிப்படுத்தப்படுகிறது என்பதைக் கண்டறிதல்
- திருக்குறளின் எளிய வடிவத்தையும் அதன் பொருளையும் அறிந்து சுவைக்கும் திறன் பெறுதல்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 31 10-07-2018 12:59:30

உரைநடை உலகம்

இயல் இரண்டு

வணிக வாயில்

KDB67N

நுழையும்முன்

தமிழ்நாட்டின் துறைமுக நகரங்கள், யவனக் குதிரைகள் ஓடுகிற ஓசையாலும் உரோமானியர்கள் பொருள்களைப் பொற்காசுகள் கொடுத்து வாங்கும் ஒலியாலும் விளக்கொளியாலும் நிரம்பி, வெளிநாட்டினரும் உள்நாட்டினரும் இரவில் நடமாடும் தூங்காத நகரங்களாகத் திகழ்ந்தன. மார்க்கோபோலோ தமது பயணக் குறிப்பில் இந்த நகர அமைப்புகள், மாட மாளிகைகள் ஆகியன தம்மைக் கவர்ந்ததாக எழுதியுள்ளார். பொ. ஆ. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த இத்தாலி நாட்டின் பிளினி தம் குறிப்பில் எகிப்து அரசி கிளியோபாட்ரா கொற்கை முத்தை அணிந்ததாகப் பதிவு செய்துள்ளார். கொற்கை முத்தின் சிறப்பினை அர்த்தசாஸ்திரமும் குறிப்பிடுகிறது. அக்காலத்தில் வணிக நகரங்களாகப் புகழ் பெற்றிருந்த துறைமுகங்கள் தமிழகத்தின் வளத்தையும் நாகரிக முதிர்ச்சியையும் வெளிக்காட்டுபவை அன்றோ!



கப்பல்களும் படகுகளும் வந்து தங்கிச் செல்வதற்குரிய இடம் துறைமுகமாகும்; இப்பகுதி கடல்வழிப் போக்குவரத்து நடைபெறும் இடமாக உள்ளது. பண்டைத் தமிழர்கள் போர், வணிகம் போன்ற காரணங்களுக்காகவும் துறைமுகங்களைப் பயன்படுத்தினர். தமிழகத்தின் துறைமுகங்கள் ஆற்றின் கழிமுகங்களில் அமைந்திருந்தன.

அறிவியல் வளர்ச்சியடைந்த இந்நாளில் திசைகாட்டும் கருவிகள், செயற்கைக்கோள்கள் முதலியவற்றின் துணையோடு கடல்வழிப் பயணத்தைத் திறம்பட மேற்கொள்ள முடிகிறது. உலகெங்கும் உருவாக்கப்படும் பொருள்களைக் குறைந்த பொருட்செலவில் உலகநாடுகள் முழுவதிலும் கொண்டு சேர்க்க இன்றும் தரைவழி, வான்வழிப்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 32 10-07-2018 12:59:30

போக்குவரத்தைவிடக் கடல்வழிப் போக்குவரத்தே பெரிதும் துணைபுரிகின்றது.

வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் எனக் கடல்களுக்குப் பெயர் சூட்டப்படுவதற்கு முன்பே தமிழர்கள் அந்தக் கடல்களைக் கடந்து கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் வணிகம் செய்யப் பயணம் மேற்கொண்டனர். தமிழர்கள் கடல் கடந்து சென்றதைப் போலவே கிரேக்கர்களும் உரோமானியர்களும் சாவகத்தீவினரும் வணிகத்திற்காகத் தமிழகத்திற்கு வந்து சென்றனர்.

பண்டைக் காலத்தில் வடவேங்கடம்முதல் தென்குமரிவரையிலான பகுதி தமிழர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. கொல்லந்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை ஆகியன கிழக்குக்கரைப் பகுதியிலிருந்த புகழ்பெற்ற துறைமுகங்களாகும். மங்களூர், நறவு, தொண்டி, மாந்தை, முசிறி, வைக்கரை, விழிஞம் ஆகியன மேற்குக் கடற்கரைப் பகுதியில் புகழ்பெற்று விளங்கிய துறைமுகங்களாகும்.

முசிறி

தமிழ்நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி. இது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில் கலக்குமிடத்தில் இயற்கையாய் உருவான துறைமுகமாகும். அக்காலத்தில் சேரநாட்டுத் தலைநகரான

தெரியுமா?

மணிமேகலையில் காந்தவூசி பற்றிய செய்தி இருக்கிறது. பழங்காலத்தில் திசை அறியக் காந்தவூசியைப் பயன்படுத்தினர் எனலாம்.

வஞ்சி, பேரியாற்றின் கரையிலுள்ள முசிறித் துறைமுகப் பட்டினத்திற்கு அருகிலேயே அமைந்திருந்தது.

முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது. யவனர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு 'யவனப்பிரியா' என்ற பெயர் ஏற்பட்டது. யவனக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதற்காக முசிறிக்கு வந்தன. இதனை,

சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங் கெழு முசிறி

என்கிறது அகநானூறு (149)

அரேபியர் சேரநாட்டு மிளகைக் கொண்டுபோய்ச் செங்கடல் துறை முகங்களிலும் எகிப்தின் நைல்நதி கடலில் கலக்கும் இடத்திலுள்ள அலெக்சாண்டிரியா துறைமுகப்பட்டினத்திலும் விற்றனர். முசிறித் துறைமுகப்பட்டினத்தில் அரேபியர் வணிகம் செய்த இடத்திற்குப் பந்தர் (கடைவீதி) என்று பெயர் இடப்பட்டிருந்தது. முசிறித் துறைமுகப் பந்தரில் முத்துகளும் விலையுயர்ந்த நகைகளும் விற்கப்பட்டன.

முசிறி துறைமுகத்திலிருந்து நறுமணப் பொருள்கள், விலை உயர்ந்த கற்கள், முத்து, வைரம், நீலமணி, தந்தம், சீனப்பட்டு, ஆமை ஓடுகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பவளம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலிய பொருள்கள் யவனர்களால் இறக்குமதி செய்யப்பட்டன. கடல்வழி வணிகம் ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டாக, முசிறி – அலெக்சாண்டிரியா ஒப்பந்தம் என்பது முசிறியில் வாழ்ந்த தமிழ்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 33 10-07-2018 12:59:30

"நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்"

(பாடல் 55, அடி: 4)

"பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்"

(பாடல் 67, அடி: 2)

"பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்"

(பாடல் 74, அடி: 6)

– பதிற்றுப்பத்து

வணிகர் ஒருவருக்கும் எகிப்தின் நைல் நதிக்கரையிலுள்ள அலெக்சாண்டிரியா நகரில் வாழ்ந்த கிரேக்க வணிகர் ஒருவருக்கும் பொ.ஆ. 150 அளவில் ஏற்படுத்தப்பட்டதாகும். அவ்வணிக ஒப்பந்தப்படி, தமிழ் வணிகர் ஒருவர், கப்பலில் ஒருமுறை கொண்டுசென்ற வணிகப் பொருள்களின் பண மதிப்பீடு 2,94,84,000 கிராம் வெள்ளியின் எடைக்கு ஈடானது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று எகிப்து நாடு உரோமப் பேரரசின்கீழ் இருந்தது.

காவிரிப்பூம்பட்டினம்

சோழவள நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின்மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நாளங்காடி இருந்தது. கடற்கரை ஓரமாகக் காவிரியாற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது.

காவிரியாற்றின் கழிமுகம் ஆழமாகவும் அகலமாகவும் பல கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாகவும் இருந்தது. கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும் பாரத்தைக் குறைக்காமலும் நேரே ஆற்றினுள் புகுந்து துறைமுகத்தை அடைந்தன.

புகார் நகரத்தின் அகன்ற பெரிய தெருக்களில் மேற்கண்ட பொருள்களோடு கங்கைக்கரையிலிருந்து வந்த பொருள்களும் காவிரிக்கரை வழங்கிய வளங்களும் ஈழத்து உணவுப் பொருள்களும் கடாரம் தந்த பொருள்களும் இன்னும் பல நாடுகளில் இருந்துவந்த பொருள்களும் கலந்து நிறைந்திருந்தன.

இக்காலத்தில் ஒரு துறைமுகத்தின் செயல்திறனைக் கணக்கிடுவதற்கு, கப்பல்கள் ஏற்றுமதி இறக்குமதிக்கென வந்து செல்லும் நேரத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். இதற்கென இன்று நமது துறைமுகங்களில் ஒருவழிப்பாதை முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதுபோல் அக்காலத்திலேயே துறைமுகங்களுக்கு அருகில் ஏற்றுமதிக்குத் தனிப்பகுதியும் இறக்குமதிக்குத் தனிப்பகுதியும் இருந்தன. பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க நல்ல அகன்ற கிடங்குகள் அமைக்கப்பட்டிருந்தன என்றும் பொருள்களுக்குச் சுங்கத் தீர்வைகள் அங்கேயே வசூலிக்கப்பட்டன என்றும் பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

தெரிந்து தெளிவோம்

இராமநாதபுரம் அழகன்குளத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கீறல் கோட்டோவியம் வணிகக் கப்பலைக் குறிக்கிறது. சங்ககாலத் தமிழர்களின் துறைமுகமாகக் கருதப்படும் அழகன் குளத்திலிருந்து ரோம் நகரத்திற்குக் கடல் பயணம் மேற்கொண்ட கப்பலின் மாதிரியாக இது குறிப்பிடப்படுகிறது.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 34 10-07-2018 12:59:30

"பல்வேறு நாடுகளிலிருந்து கடல் வழியாகக் கப்பல்கள் மூலம் வந்து இறங்கிய பொருள்களும், வெளிநாடுகளுக்குக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உள்நாட்டின் பலபகுதிகளில் இருந்தும் வந்துள்ள பொருள்களும் எண்ண முடியாத அளவுக்குக் குவிந்திருக்கும்; புகார் நகரத்தில், காவல் மிகுந்த சுங்கச்சாவடி இருக்கும் சாலையில், சுங்கத் தீர்வையைப் பெற்றுக்கொண்டு, சோழப் பேரரசின் இலச்சினையான புலிச்சின்னத்தை அடையாளமிட்டு வெளியே அனுப்புவதற்காகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் மலைபோல் தோற்றம் தரும்" என்கிறது பட்டினப்பாலை (அடிகள் 124-135).

பொ.ஆ. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமாபுரியிலிருந்து வந்த யவனர்களும் கிழக்கிலிருந்து வந்த சாவக நாட்டினரும் வட இந்தியரும் இங்கு வணிகம் செய்தார்கள். சோழ நாட்டு வணிகர் இந்தத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சாவக நாடு, காழகம், கங்கைத் துறைமுகம் முதலான இடங்களுக்குச் சென்று வணிகம் செய்தனர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்திருந்தனர். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங்களின் தலைமை மாந்தர்களான கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோர் இளவரசன் கிள்ளிவளவன் ஆட்சிக்காலத்தில் இப்பட்டினத்தில் வாழ்ந்திருந்தனர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

கொற்கை

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை. பாண்டியர்களில், ஆளும் மன்னரை அடுத்து அரசாள வரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தங்கி நிருவாகம் கற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்தபின் கொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள்ள

கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன்
(அடி : 127)

மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின்
(அடி : 134)

மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்
(அடி: 138)

ஆகிய அடிகள் குறிப்பிடுகின்றன. பாண்டியர்களின் கப்பற்படைத் தளமாகவும் கொற்கை விளங்கியது.

கொற்கைக் குடாக்கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்து கல் தொலைவிற்கு ஊடுருவியிருந்தது. இங்கு முத்துச்சிப்பிகளும், சங்குகளும் உண்டாயின. செல்வர் ஏறிவரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக்கொள்ளும் அளவிற்குக் கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்தன. இதனை அகநானூறு,

... திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப்புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை
(வெண்கண்ணனார் பாடல் 130)

என்று குறிப்பிடுகிறது. முத்துக் குளிப்பது மட்டுமன்றி வலம்புரிச்சங்கு எடுக்கவும்

வெளிநாடுகளில் இருந்து கடல்வழி வந்தவை	குதிரைகள்
உள்நாட்டில் இருந்து தரைவழியில் வந்தவை	கறி (மிளகு)
வடமலையில் இருந்து வந்தவை	மெருகிடப்பட்ட பொன், மணிக்கற்கள்
மேற்குமலையில் இருந்து வந்தவை	சந்தனம், ஆரம்
தென் கடலில் இருந்து கிடைத்தவை	முத்து
கீழ்க்கடலில் விளைந்தவை	பவளம்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 35 10-07-2018 12:59:30

தெரியுமா?

பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பல்ஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அது முதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன. அந்தப் பருவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பல்ஸ் என்பதையே சூட்டினர். ஹிப்பல்ஸ் பருவக்காற்று வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று. பொ.ஆ. முதல் நூற்றாண்டில் உரோமப் பேரரசை ஆண்ட அகஸ்தஸ் சீஸர், யவனர் – தமிழர் வணிகத்தை விரிவுபடுத்தினார். உரோமபுரி அரசர்களின் உருவ முத்திரை இடப்பட்ட பழைய நாணயப் புதையல்கள் தமிழ்நாட்டில் சில இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள ஆடவர் கடலில் மூழ்குவர் என்னும் செய்தியை, 'வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்' என அகநானூற்றின் 350ஆம் பாடல் சுட்டுகிறது.

தற்காலத்தில் கொற்கைப்பகுதியில் நடந்த அகழாய்வின்போது கிடைத்த பெருங்கற்காலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகள், இப்பகுதியின் தொன்மைக்கு மேலும் சான்றுகளாகின்றன. சங்ககாலம்முதல் பிற்காலப் பாண்டியர் காலம்வரை பாண்டிய நாட்டு முத்துகளை உரோம் நகரத்தினர் விரும்பி வாங்கியுள்ளனர். கொற்கையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் உரோம் நாட்டின் அகஸ்டஸ் மன்னனின் அரசவைக்கு முத்துகளைப் பரிசாக அளித்தார்கள் என்று வரலாற்று அறிஞர் ஸ்டிராபோ குறிப்பிடுகிறார்.

பாண்டிய மன்னர்களின் குதிரைப்படைகளுக்காக ஆண்டுதோறும் கொற்கைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான பாய்மரக் கப்பல்களில் 16,000 அரேபியக் குதிரைகள் வந்து இறங்கின என்கிற செய்தியையும் வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்.

கொற்கைப் பட்டினத்தில் பாண்டிய நாட்டு நாணயங்களை அச்சிடுவதற்கான பட்டறைகள் நிறைந்த ஒரு தெரு இருந்திருக்கிறது. அந்தத் தெருவிற்கு அஃகசாலை எனப் பெயரிடப்பட்டிருந்தது. பாண்டியர்கள் வெளியிட்ட மீன்முத்திரை பதித்த வெள்ளி நாணயங்கள் இங்குக் கிடைத்துள்ளன.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலக மாந்தரின் உறவை விரும்பியவர்கள் தமிழர்கள். சேர, சோழ, பாண்டியர் ஆட்சியின்கீழ் இருந்த கிழக்குக்கரை, மேற்குக்கரைத் துறைமுகங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு காலத்தில் வெவ்வேறு வகைகளில் சிறந்து விளங்கின. தமிழர்கள் கடல் வணிகத்தின்மூலம் ஆழிசூழ் நிலவுலகை மட்டுமன்றி ஆழியையும் தம் ஆளுகையில் பல நூற்றாண்டுகளாக வைத்திருந்தார்கள் என்பதற்கு இத்துறைமுகங்கள் சான்று பகர்கின்றன.

கற்பவை கற்றபின்...

1. உங்கள் வாழிடத்தின் அருகிலுள்ள துறைமுகம் குறித்த செய்திகளைப் படங்களுடன் திரட்டுக.
2. பண்டமாற்று முறைக்கும் தற்போதுள்ள பண வணிகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் கலந்துரையாடிப் பதிவு செய்க.

KEHXRZ

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 36 10-07-2018 12:59:31

கவிதைப் பேழை

இயல் இரண்டு

நான்மாடக் கூடல்



தமிழகத்தின் தொன்மையான நகரம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து மக்கள் வாழ்ந்து வரும் நகரங்களுள் இதுவும் ஒன்று. பாண்டிய மன்னர்களின் தலைமையிடமாகவும் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இடமாகவும் இந்நகரம் விளங்குகிறது. கௌடில்யர் (பொ.ஆ.மு. 370), கிரேக்க தூதர் மெகஸ்தனிஸ் (பொ.ஆ.மு 350) போன்ற வெளிநாட்டுப் பயணிகளாலும் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்கது நான்மாடக்கூடலாம் மதுரை. செவ்விலக்கியத்தின் தலைநகராகத் திகழும் மதுரையின் பெருமையைக் கூறுகிறது இந்தச் சிந்துவகைப் பாடல்.

KERTTH

சந்தம்

தன்னன்ன னாதினம் தன்னானே– தனத்
தன்னன்ன னாதினம் தன்னானே!

பாடல்

பாவலர் பாடிய வைகைநதி –தமிழ்ப்
பாண்டியர் செங்கோல் நின்னபதி!
ஓவிய வீதிகள் சூழ்ந்திருக்கும் – ஊரில்
மல்லிகைப் பூமணம் வாழ்ந்திருக்கும்!

காவியம் எழுந்த தென்மதுர – விழாக்
காணுமே அழகர் பொன்குதிர!
ஆவலாய் இருக்கு சுத்திவர– இங்கு
ஆளும் தமிழுக்கு என்னதர?

பாரதி போதிச்ச பாடசாலை – திருப்
பரங்குன்ற முருகன் நின்னசோலை!
கோரிப் பாளையத்தில் பள்ளிவாசல் – உயர்
கோபுர மீனாட்சி மேகஊஞ்சல்!

சீரான வண்டியூர்த் தெப்பக்குளம் – மிகச்
சிறப்பான பண்பாட்டுத் தலைநகரம்!
ஏறுதழுவுதல் காளைகளால் – தோள்
ஏறுமே கம்பீரம் மாலைகளால்!

நாயக்கர் மகாலின் தூணழகு– பொன்
தாமரைக் குளமோ பேரழகு!
தூங்கா நகரம் முழிச்சிருக்கும் – அதுல
தொண்ணூறு வியாபாரம் செழிச்சிருக்கும்!

ஆனமலை நல்ல நாகமலை – சுத்தி
அமைஞ்ச பசுமலை சமணமலை!
நாலுமலை கொண்ட பெருநகரம் – இதுக்கு
நான்மாடக் கூடல்னு நல்லபேராம்!

எல்லா இனமும் மதமும்உண்டு –இங்கு
இறையருள் ஆலயம் ஏகமுண்டு!
பல்லாயிரம் ஆண்டு வரலாறு – இதைப்
பாடாத நாவில்லை பண் பாடு!

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 37 10-07-2018 12:59:31

இலக்கணக் குறிப்பு

செங்கோல், பேரழகு – பண்புத்தொகைகள்

எழுந்த – பெயரெச்சம்

பாடாத – எதிர்மறைப் பெயரெச்சம்

பாடு – ஏவல் வினைமுற்று

பகுபத உறுப்பிலக்கணம்

வாழ்ந்திருக்கும் – வாழ்ந்திரு + க் + க் + உம்

வாழ்ந்திரு – பகுதி

க் – சந்தி

க் – எதிர்கால இடைநிலை

உம் – வினைமுற்று விகுதி

நூல் வெளி

சிந்து என்பது ஓசைநயத்துடன் பாடக்கூடிய பாவகை. நாட்டுப்புறப் பாடல் அமைப்பிலிருந்து தோன்றிய இவ்வடிவம் சிலப்பதிகாரக் காலத்திலிருந்து வழக்கில் இருக்கிறது. சிந்துவகைப் பாடல்களை ஆராய்ந்தால், அவை சந்தமும் இயைபுத் தொடையும் அமைந்த கண்ணிகளைக் கொண்டவை என்பதை அறிய முடிகிறது. இதே காலத்தில் கும்மிப்பாடல்களும் காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, நொண்டிச்சிந்து போன்ற சந்தப்பாடல்களும் ஆனந்தக்களிப்பு, தெம்மாங்கு (தென்பாங்கு) முதலிய நாட்டுப்பாடல் வடிவங்களும் புதிய பாவடிவங்களாகத் தோன்றியுள்ளன. பாடப் பகுதியான மதுரை பற்றிய சிந்துப் பாடல் ஆசிரியர் குழுவால் இயற்றப்பட்டது.

தெரிந்து தெளிவோம்

ஓரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது சிந்துப் பாவகையாகும்.

பாரதியார் சிந்து வகையினை அதிகமாகக் கையாண்டிருக்கிறார். அவர் சிந்துக்குத் தந்தை என்று போற்றப்படுகிறார்.

சிந்து என்பது இசைத்தமிழ்ப் பாகுபாடுகளில் ஒன்று. பல்லவி (எடுப்பு), அனுபல்லவி (தொடுப்பு) இன்றிச் சரணங்களுக்குரிய (முடிப்பு) கண்ணிகளுடன் உடைய பாக்கள் சிலவகைச் சிந்துகளில் காணப்படுகின்றன.

சித்தர் பாடல்கள் பல சிந்துவகையில் அமைந்திருப்பதை நாம் காணலாம்.

எ.கா. கடுவெளிச் சித்தரின் 'பாபம் செய்யாதிருமனமே' என்னும் பாடல்.

கற்பவை கற்றபின்...

1. *அண்ணாமலையாரின் காவடிச்சிந்துப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து வகுப்பறையில் பாடுக.*
2. *பாரதியும் பாரதிதாசனும் பட்டுக்கோட்டையாரும் பாடிய சிந்துப் பாடல்களைத் தொகுத்துப் பாடல்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.*
3. *உங்கள் ஊர்ப்பெருமையைக் கூறும் வகையில் ஒரு சந்தப்பாடலை எழுதிப் பாடுக.*

KF1PVA

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 38 10-07-2018 12:59:31

இயல் இரண்டு

கவிதைப் பேழை

மதுரைக்காஞ்சி

KFAKHX

நுழையும்முன்

மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ள நூல்களுள் பதினெண் மேற்கணக்கின், மதுரைக்காஞ்சி முதன்மையானது. இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை கொத்தளம், அந்நகரில் நிகழும் திருவிழாக்கள், பலவகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன. காலை தொடங்கி மறுநாள் விடியல்வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்ணுற்றதை முறைப்படுத்திக் கூறுவது போன்ற வருணனைப் பாடல் இது.

மதுரை மாநகர்

மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்உற ஓங்கிய பல்படைப் புரிசை
தொல்வலி நிலைஇய, அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழைஆடும் மலையின் நிவந்த மாடமொடு
வையை அன்ன வழக்குடை வாயில்
வகைபெற எழுந்து வானம் மூழ்கி
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்இல்
ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்
பல்வேறு குழாஅத்து இசைஎழுந்து ஒலிப்ப
மாகால் எடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை அறைவனர் நுவல
கயம் குடைந்தன்ன இயம்தொட்டு இமிழிசை
மகிழ்ந்தோர் ஆடும் கலிகொள் சும்மை
ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து

(அடிகள் 351–365)

– மாங்குடி மருதனார்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 39 10-07-2018 12:59:31

மண்வரை ஆழ்ந்த தெளிந்த அகழி,
விண்ணை முட்டும் கற்படை மதில்கள்,
தொன்மை உடைய வலிமை மிக்க
தெய்வத் தன்மை பொருந்திய நெடுவாசல்,
பூசிய நெய்யால் கறுத்த கதவுகள்,
முகில்கள் உலவும் மலையொத்த மாடம்,
வற்றாத வையைபோல் மக்கள் செல்லும் வாயில்,
மாடம் கூடம் மண்டபம் எனப்பல
வகைபெற எழுந்து வானம் மூழ்கி
தென்றல் வீசும் சாளர இல்லம்,
ஆற்றைப் போன்ற அகல்நெடும் தெருவில்
பலமொழி பேசுவோர் எழுப்பும் பேச்சொலி,
பெருங்காற்று புகுந்த கடலொலி போல
விழாவின் நிகழ்வுகள் அறையும் முரசு,
நீர்குடைந்ததுபோல் கருவிகளின் இன்னிசை,
கேட்டோர் ஆடும் ஆரவார ஓசை,
ஓவியம் போன்ற இருபெரும் கடைத் தெருக்கள்.

பாடலின் பொருள்

மதுரை மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழைமையானதும் வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய்பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன. இடைவிடாது ஓடுகின்ற வையை ஆற்றைப்போல மக்கள் எப்போதும் வாயில்கள்வழிச் செல்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக்கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன. ஆறு போன்ற அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலிபோல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மைபோல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள்போலக் காட்சியளிக்கின்றன.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 40 10-07-2018 12:59:32

தெரியுமா?

"பொறிமயிர் வாரணம் ...
கூட்டுறை வயமாப் புலியொடு குழும" (மதுரைக்காஞ்சி 673 – 677 அடிகள்)
என்ற அடிகளின் மூலமாக மதுரையில் வனவிலங்குச் சரணாலயம் இருந்த செய்தியை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்

சொல்லும் பொருளும்

புரிசை – மதில்; அணங்கு – தெய்வம்; சில்காற்று – தென்றல்; புழை – சாளரம்; மாகால் – பெருங்காற்று; முந்நீர் – கடல்; பணை – முரசு; கயம் – நீர்நிலை; ஓவு – ஓவியம்; நியமம் – அங்காடி.

இலக்கணக் குறிப்பு

ஓங்கிய – பெயரெச்சம்; நிலைஇய – சொல்லிசை அளபெடை; குழாஅத்து – செய்யுளிசை அளபெடை; வாயில் – இலக்கணப் போலி.

மா கால் – உரிச்சொல் தொடர்; முழங்கிசை, இமிழிசை – வினைத்தொகைகள்.

நெடுநிலை, முந்நீர் – பண்புத் தொகைகள்; மகிழ்ந்தோர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம்

ஆழ்ந்த – ஆழ் + த்(ந்) + த் + அ

ஆழ் – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்);
த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

ஓங்கிய – ஓங்கு + இ(ன்) + ய் + அ

ஓங்கு – பகுதி;
இ(ன்) – இறந்தகால இடைநிலை

ய் – உடம்படுமெய் அ – பெயரெச்ச விகுதி.

மகிழ்ந்தோர் – மகிழ் + த்(ந்) + த் + ஓர்

மகிழ் – பகுதி;

த் – சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடைநிலை;

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது. இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதைப் 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

கற்பவை கற்றபின்...

1. *உங்கள் ஊரின் பெயர்க் காரணத்தை எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.*
2. *தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின – இத்தொடர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளைத் திரட்டி ஐந்து மணித்துளிகள் பேசுக.*

KFJGYK

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 41 10-07-2018 12:59:32

விரிவானம்

இயல் இரண்டு

சந்தை

KFTD18

நுழையும்முன்

வண்டிப் பட்டைகளின் தொடர்ந்த தாளக்கட்டோடு, இழுத்துச் செல்கிற மாடுகளின் கழுத்துமணி ஓசையோடு சந்தைக்குப் பொருள் கொண்டுபோவதும் பொருள் வாங்கிவருவதுமான மகிழ்ச்சி பெருநகரங்களில் தொலைந்துவிட்டது. இருப்பினும், இன்றும் சில இடங்களில் சந்தை மரபு இருந்துகொண்டுதான் இருக்கிறது. பல்பொருள் அங்காடிகளின் வருகை, வணிகருக்கும் மக்களுக்குமான உறவைக் குறைத்து வருகிறது. சந்தையில் வணிகம் மட்டுமல்லாமல் வாங்குபவரின் மனநிறைவும் பேணப்பட்டது. தலைமுறை தலைமுறையாகப் பொருள்களை விற்பவர் – வாங்குபவர் உறவு வளர்த்த சந்தை வணிகம் அறியப்படவேண்டிய ஒன்று.

பூஞ்சோலை கிராமத்திலிருந்து புதுச்சேரியில் உள்ள தம்முடைய மகள் வீட்டிற்கு வந்திருக்கிறார் பெரியவர் தணிகாசலம். இவர் தம் ஊரில் மரபுவழி வேளாண்மை செய்பவர். ஊராட்சித் தலைவராகவும் தொண்டாற்றிய அனுபவம் மிக்கவர். ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் பெயரன் மூர்த்தியும் நான்காம் வகுப்பில் படிக்கும் பெயர்த்தி கீர்த்தனாவும் அவருடன் நடத்திய உரையாடலின் சிறு பகுதி.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 42 10-07-2018 12:59:32

கீர்த்தனா: தாத்தா! எங்க ஊர்ல புதுசா 'மால்' திறந்திருக்காங்க, வர்றீங்களா போய்ப் பார்த்துட்டு வரலாம்?

தாத்தா: 'மால்'னா, என்ன கண்ணு அர்த்தம்?

மூர்த்தி: ஒரே இடத்துல எல்லாக் கடைகளும் இருக்கும் தாத்தா. குண்டூசியிலிருந்து கணினி வரைக்கும் வாங்கலாம். பல்லங்காடியகம்னு சொல்லலாம்.

தாத்தா: பழங்காலத் தமிழ் இலக்கியத்தில் 'நாளங்காடி', 'அல்லங்காடி' என்பார்களே அது மாதிரியா?

மூர்த்தி: நாளங்காடி, அல்லங்காடியா? ஒன்னும் புரியலியே?

தாத்தா: பகலில் செயல்படும் கடைவீதிகளை 'நாளங்காடி' என்றும் இரவில் செயல்படும் கடைவீதிகளை 'அல்லங்காடி' என்றும் சொல்வாங்க. நாள் என்றால் பகல்; அல் என்றால் இரவு.

மூர்த்தி: நீங்க கடைவீதியைப் பத்தி சொல்றீங்க. அது இல்ல தாத்தா இது. இங்க ஒரே கட்டடத்துல கடைகள், திரைப்பட அரங்கு, உணவகம், கேளிக்கை அரங்குகள்-ன்னு எல்லாமே இருக்கும் தாத்தா.

கீர்த்தனா: தாத்தா, அவன் ஏதாவது பேசிகிட்டே இருப்பான். நீங்க கிளம்புங்க போயிட்டு வரலாம்.

தாத்தா: சரி கண்ணு. நீதான் கிளம்பணும். நான் தயாராகத்தான் இருக்கேன். எங்க காலத்துச் 'சந்தை' தான் இப்ப வளர்ந்து, நீங்க சொல்ற 'மால்' ஆயிடுச்சா மூர்த்தி?

மூர்த்தி: சந்தையா? அது எப்படி இருக்கும்? நான் மேல்நிலை வகுப்பில் வணிகவியல் எடுத்துப் படிக்கலாம்னு இருக்கேன். அதனால அதைப்பற்றித் தெளிவாச் சொல்லுங்க தாத்தா.

தாத்தா: மனுசங்க நாடோடியா வேட்டையாடி வாழ்ந்த காலத்துல அவங்களுக்குக் கிடைச்ச உணவை அவங்களுக்குள்ளாவே பகிர்ந்துகிட்டாங்க. அதனால் அந்தக் காலத்துல பொதுச் சந்தைன்னு ஒன்னு தேவைப்படலை. பின்னாடி காலம் மாறி உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டபோது தமிழ்நாட்டின் நால்வகை நிலங்களில் வாழ்ந்த மக்களோட தேவை, பயன்பாடு, உற்பத்தி ஆகியவை பெருகின. ஒன்றைக் கொடுத்து இன்னொன்று வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. விற்று வாங்குவதும், வாங்கி விற்பதுமான பண்டமாற்று முறை உண்டாச்சு.

கீர்த்தனா: தாத்தா கிளம்புங்க. இங்க இருந்து பக்கம்தான் நடந்தேகூட போயிடலாம்.

மூர்த்தி: எதுக்கு கீர்த்தனா தாத்தாவ நச்சரிக்கிற? தாத்தா சந்தையைப் பற்றிச் சொல்லி முடிக்கட்டும், அப்புறம் போகலாம்.

தாத்தா: பரவாயில்ல மூர்த்தி, நடந்துகிட்டே சொல்றேன் வா.

(மூவரும் தெருவில் இறங்கி நடந்து செல்கின்றனர்.)

மூர்த்தி : பண்டமாற்றுமுறை என்றால் காசு பணம் இல்லாம செய்கிற சிறு வணிகம் தானே. அது எப்படி தாத்தா சந்தை முறையா மாறிச்சு?

தாத்தா: கிராமத்து மக்கள் தங்களோட நிலத்தில் விளையும் காய்கறி, கீரை, தானியம் போன்ற பொருள்களை விற்கவும் தேவையான மாற்றுப் பொருள்களை வாங்கவும் விரும்பி முச்சந்தி, நாற்சந்தின்னு மக்கள் கூடும் இடங்களில் கடை விரிச்சாங்க. இதுதான் சந்தைங்கிற பொது வணிக இடமாகப் பின்னால் மாறியது.

கீர்த்தனா: தாத்தா! அங்க பாருங்க எவ்வளவு பெரிய விளம்பரம் வச்சிருக்காங்க.

தாத்தா: இப்பல்லாம் விளம்பரம் இல்லன்னா வியாபாரமே இல்லன்னு ஆயிடுச்சு. ஆளுக்கு ஒப்பனை செய்தது பத்தாதுன்னு இப்ப ஆப்பிளுக்கே ஒப்பனை செய்கிறார்கள். பிரபலங்களை வைத்து விளம்பரம் கொடுத்துச் செய்வதுதான் கல்லா

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 43 10-07-2018 12:59:32

கட்டும் தந்திரம்னு ஆயிடுச்சு! ஆனா, சமூகம் சார்ந்து உண்டான கிராமச்சந்தையில் அப்படி இல்ல. கலப்படம் இல்லாத நேர்மைதான் கிராமச்சந்தையோட அடிப்படை. ஒரு குறிப்பிட்ட ஊரை மையப்படுத்தி நூற்றுக்கணக்கான கிராம மக்கள் இப்படி நேர்மையா தங்களோட பொருள்களைப் பகிர்ந்துக்கிட்டாங்க.

மூர்த்தி: முதல்ல 'சந்தை'ன்னு சொல்லிட்டு, அப்புறம் ஏன் அத கிராமச்சந்தைன்னு மாத்திச் சொல்றீங்க தாத்தா.

தாத்தா: உள்ளூர்த் தேவைக்கு ஏற்ற மாதிரி, அங்க விளைகிற உணவுப் பொருள்களையும் விவசாயம், சமையல், வீடு ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களையும் சிறிய அளவில் விற்கிற சிறு வணிகச் செயல்பாடுதான் கிராமச்சந்தை. மக்களோட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யறதுதான் அதோட நோக்கம். நம்ம மனசை மயக்கிற மாதிரி வெறும் மிகைவரவு சார்ந்து இயங்குவது புதிய சந்தை. அதிலிருந்து வேறுபடுத்தத்தான் அப்படிச் சொன்னேன்.

மூர்த்தி: சந்தையில என்னவெல்லாம் வாங்கலாம் தாத்தா?

தாத்தா: கிராமச்சந்தையில கிடைக்காத பொருள்களே இல்லை. கடுகு, சீரகத்தில் இருந்து உணவுத் தானியங்கள், காய்கறிகள்; கோழி, ஆடு, மாடு, குதிரைன்னு கால்நடைகள்; சோப்பு, சீப்பு, கண்ணாடி, வளையல்கள் போன்ற அலங்காரப் பொருள்கள்; இரும்புப் பொருள்கள், பாத்திரங்கள், துணிமணிகள்னு ஒரு குடும்பத்துக்கு, தொழிலுக்குத் தேவையான எல்லாத்தையும் வாங்கலாம். அது மட்டுமல்லாம பல பேருக்கு வேலை வாய்ப்பையும் கொடுத்தது கிராமச்சந்தை.

மூர்த்தி: காய்கறி, தானியம் சந்தையில விற்பார்கள் என்று சொன்னீங்க. ஆடு மாடுங்கள ஏன் தாத்தா சந்தையில விற்கிறாங்க?

தாத்தா: மக்கள் நாகரிகம் குறிஞ்சி நிலத்துல வேரூன்றி, முல்லை நிலத்துல வளர்ந்து, மருதத்துல முழுமையும் வளமையும் அடைஞ்சுது. எல்லா நிலங்களிலும் மக்களுக்கு ஆடு, மாடுகளோடு தொடர்பு இருந்துகிட்டே இருக்கு. உழவுத் தொழில்ல மனுசனுக்குப் பக்கபலமா மட்டுமில்ல, இணையாகவும் துணையாகவும் கால்நடைங்க இருந்திருக்கு. அந்த வகையிலதான் அவற்றோட தேவை அதிகமாகி வாங்க வேண்டிய, விற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கு. கால்நடைச் சந்தை தமிழ்நாடு முழுவதும் இருக்கு. மதுரைப்பக்கம் மாட்டுச் சந்தைய 'மாட்டுத்தாவணி'ன்னு சொல்லுவாங்க. தாவணின்னா சந்தைன்னு பொருளாம். இப்ப மதுரைப் பேருந்து நிலையம் இருக்கிற இடம் அது.

கீர்த்தனா: கிராமச்சந்தை பத்திக் கேக்கவே ஆர்வமா இருக்கு. மேல சொல்லுங்க தாத்தா.

தாத்தா: கழைக்கூத்தும் பொம்மலாட்டமும் கிராமச்சந்தையில் உண்டு. சந்தைக்குப் போறது எங்க காலத்துல திருவிழாவிற்குப் போகிற மாதிரி; அக்கம் பக்கத்து ஊர் உறவுகளைச் சந்தித்துப் பேசலாம்; சாதி மதத்தைத் தாண்டி எல்லோருடனும் பழக முடியும்; ஆண்-பெண் பேதமில்லாம, ரெண்டு பேரும் சந்தைச் செயல்பாடுகள்ல

தெரியுமா?

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள். விற்பவரும் வாங்குபவரும் உறவுகளாய்ப் பேசி மகிழும் ஆரவாரம் அங்கே ஒலிக்கிறது. 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது. கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்கிறது.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 44 10-07-2018 12:59:32

கலந்துக்குவாங்க; மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் தலைமுறை தலைமுறையா தொடர்பும் நட்பும் இருக்கும்; வாரம் ஒருமுறை உறவுக்காரர்களைப் பார்த்துட்டு வர்ற மாதிரி ஒரு மகிழ்ச்சி இருக்கும்.

மூர்த்தி: பூஞ்சோலை வீட்டுல அத்தனை ஆடுமாடு இருக்கே எல்லாமே சந்தையில் வாங்கியதுதானா?

தாத்தா: சந்தையில் வாங்கியதும் உண்டு, வீட்டிலேயே பிறந்து வளர்ந்ததும் உண்டு. சந்தையில ஆடு, மாடு வாங்குவதை இப்ப நினைச்சா வேடிக்கையா இருக்கும். துண்டைப் போட்டுக் கைகளை மறைச்சுக்கிட்டு விலை பேசுவது ஒரு உத்தி. கொம்பு, பல், வால், திமிலைப் பார்த்து மாட்டோட வயசு, வலிமையைக் கண்டுபிடிக்கிறது ஒரு தனித்திறமை. நான் தஞ்சாவூர்ச் சந்தையில மாட்டை வாங்கி, அதைக் கொள்ளிடம் வழியா நடந்தே ஒரு வாரம் ஓட்டி வந்திருக்கேன்.

மூர்த்தி: ஆடு மாடுகளை மட்டுந்தான் சந்தையில் விற்பனை செய்வாங்களா தாத்தா?

தாத்தா: யார் சொன்னது? ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு சந்தைக்குப் பேர் போனது. மணப்பாறைன்னு சொன்னா மாட்டுச்சந்தை, அய்யலூர்னா ஆட்டுச் சந்தை, ஒட்டன்சத்திரம்னா காய்கறிச் சந்தை, நாகர்கோவில் தோவாளைன்னா பூச்சந்தை, ஈரோடுன்னா ஜவுளிச் சந்தை, கடலூருக்குப் பக்கமா இருக்கிற காராமணி குப்பம்னா கருவாட்டுச் சந்தை, நாகப்பட்டினம்னா மீன் சந்தை இப்படித் தமிழ்நாடு முழுதும் பல சந்தைகள் இருக்கு. இவை தவிர ஒவ்வொரு வட்டாரத்திலும் கிராமச் சந்தைகள் ஏராளம். கிழமையைக் கணக்கு வைத்து ஒவ்வொரு ஊர்ச் சந்தைக்கும் சென்று வரும் வியாபாரிகள் உண்டு. எந்தச் சந்தையில் எது சிறப்பு, எது விலை மலிவு என அனுபவத்தில் அறிந்து வாங்கிவர ஊர் ஊராகச் செல்லும் மக்களும் உண்டு.

கீர்த்தனா: அங்கே அதோ தெரியுது பாருங்க தாத்தா பெரிய கட்டடம். அதுதான் 'மால்'.

தெரியுமா?

இன்றைக்கும் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும், வாரச் சந்தைகளும் மாதச் சந்தைகளும் குறிப்பிட்ட சில பொருள்களை மட்டும் விற்கும் சந்தைகளும் மாலை நேரச் சந்தைகளும் நடந்தவண்ணம் உள்ளன.

மூர்த்தி: இந்த மாதிரி பன்னாட்டு அறிவியல் தொழில் நுட்பத்தோட இயங்குற வணிக வளாகங்களுக்கும் கிராமச்சந்தைகளுக்கும் என்ன வேறுபாடு? தாத்தா!

தாத்தா: நவீன சந்தையில் உற்பத்தி செய்கிறவன் ஒருத்தன்; மொத்தமாக வாங்குகிறவன் வேறு ஒருத்தன். சில்லறையாக விற்கிறவன் இன்னொருத்தன்னு இருப்பாங்கன்னு நினைக்கிறேன். கிராமச்சந்தையில உற்பத்தியாளன்தான் விற்பனையாளன். பெரும்பாலும் இடைத்தரகர்களுக்கு வேலை இல்ல. குளிரூட்டப்பட்ட அறை இல்லை. வாடகை இல்லை. விற்கிறவனும் வாங்குகிறவனும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் அதுதான் பொருளோட விலை.

கீர்த்தனா: இதோ வந்தாச்சு. வாங்க அந்தத் தானியங்கிப் படிக்கட்டில் ஏறி மேலே போகலாம்.

தாத்தா: நீ என்ன வாங்கணும் மூர்த்தி?

மூர்த்தி: எனக்கு ஒன்னும் வேணாம் தாத்தா. கீர்த்திதான் பாக்கறதெல்லாம் கேப்பா.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 45 10-07-2018 12:59:33

(நடக்கிறவர்கள் பேசிக்கொள்வதும் இயந்திரங்களின் ஓசைகளும் பேரிரைச்சலை ஏற்படுத்தின.)

மூர்த்தி: 'சந்தைக்கடைச் சத்தம்' அப்படின்னு சொல்வாங்களே அதுவும் இந்தச் சத்தமும் ஒண்ணா தாத்தா?

தாத்தா: சந்தைக்கடை சத்தமாத்தான் இருக்கும். ஆனா இந்த மாதிரி இரைச்சலா இருக்காது. சந்தை வெறும் உதட்டு வியாபாரம் மட்டும் பேசும் களம் இல்லை. வாங்க வாங்க என ஏதோ கல்யாண வீடு போல வரவேற்று நலம் விசாரித்த பிறகுதான் ஒவ்வொரு கடையிலும் வியாபாரம் நடக்கும். விசாரிப்புகளுக்கு மத்தியில் ஓர் உறவுக் கம்பி இழையோடும். இதனால, உரிய வயசுல பேச்சு வராத குழந்தைங்களைச் சந்தைக்குக் கூட்டிக்கிட்டுப் போவோம். சந்தையில கேக்குற சொற்களையும் பலவித குரல் ஏற்ற இறக்கங்களையும் உள்வாங்கிக்கிற குழந்தைங்களுக்குப் பேச்சு வந்துவிடும்.

(கீர்த்தனா ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த பெரிய குரங்கு பொம்மை ஒன்றைத் தொட முயன்றாள். கடையின் வேலையாள் தொடக்கூடாதெனக் கீர்த்தனாவிற்குச் சைகை காட்டினார்.)

தாத்தா: பார்த்தியா? பொம்மையைத் தொடக்கூடாதுன்னு சொல்கிறார். குழந்தைகளை நாட்டுச்சந்தைக்குக் கூட்டிக்கொண்டு போனால், கடையில் இருக்கும் தக்காளி, கேரட் எனக் குழந்தை எதை எடுத்தாலும் அதற்குக் காசு இல்லை. குழந்தையின் ஆசையில் வணிகம் குறுக்கிடாது.

மூர்த்தி: வியாபாரத்துல கருணைக்கு இடம் கொடுத்தா, முதல் தேறாதே தாத்தா.

தாத்தா: நாட்டுச் சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்குவதோடு முடிந்துபோவதில்லை. சந்தையில் பார்த்துப் பழகியவர்கள் சம்பந்திகளாகி உறவினர்கள் ஆகிவிடுவதுமுண்டு! சந்தையின் சாதாரண விசாரிப்புகளிலும் நேசம் உண்டு, நேர்மை உண்டு.

கீர்த்தனா: தாத்தா அங்கே பாருங்க அந்தக் குழந்தை பொம்மை எவ்ளோ பெருசா இருக்கு? விலை அதிகமா இருக்குமோ தாத்தா?

தாத்தா: விலையைப் பத்தி என்ன இருக்கு. உனக்குப் பிடிச்சிருக்கா சொல்லு.

கீர்த்தனா: 'ஏம்மா, இவ்வளவு பெரிய பொம்மைய வாங்கியாந்தே?'ன்னு அம்மா சத்தம் போடும் தாத்தா.

தாத்தா: அதை நான் பார்த்துக் கொள்கிறேன். (பொம்மை வாங்குகிறார்கள்) உனக்கு ஏதும் வேணுமா மூர்த்தி?

மூர்த்தி: வேணாம் தாத்தா. பழக்கூழ் வேணும்னா குடிக்கலாம் தாத்தா.

தாத்தா: சரி. குடிக்கலாம். எனக்குப் பனிக் கட்டி போடாமல் வாங்கு. (மூவரும் பழக்கூழ் அருந்தியவாறே உரையாடுகின்றனர்)

மூர்த்தி: இவ்வளவு பிரம்மாண்டமான கடையில பல அடுக்குகளில் பொருள்களைக் குவிச்சு வெச்சிருக்காங்க

தாத்தா: ஆமா. யார்யாருக்கு எது வேணுமோ அததுக்குத் தனித்தனியான பகுதிகள் இருக்கு. தேவைக்கும் அளவுக்கும் ஏற்பப் பொருள்களை நாமே தேர்ந்தெடுக்கலாம் போல.

கீர்த்தனா: ஆமா, தாத்தா பெரும்பாலும் பல அளவுள்ள பொட்டலங்கள் போட்டு வைத்திருக்காங்க. கெடுநாளும் குறிச்சிருப்பாங்க. நாமதான் பாத்து வாங்கனும். சரி வீட்டுக்குப் போலாம் தாத்தா.

தாத்தா: சரி, வாங்க போகலாம்

மூர்த்தி: இந்தமாதிரி அங்காடிகள் பலபேருக்கு நிரந்தர வேலை கொடுக்குது தாத்தா

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 46 10-07-2018 12:59:33

தாத்தா: அப்படிச் சொல்ல முடியாது. நிரந்தரப் பணியாளர் குறைச்சலாத்தான் இருப்பாங்க. தற்காலிகப் பணியாளர்தான் அதிகம். பலபேர் வந்து கொஞ்சநாள் வேலை பார்த்துட்டுப் போயிடுவாங்க.

கீர்த்தனா: பொருள்களை விற்கணும். தீர்ந்தவுடனே வாங்கிவைக்கணும். பெரிய வேலைதான் தாத்தா.

தாத்தா: இதுபோன்ற கடைகளைத் திட்டமிட்டாத்தான் நிருவகிக்க முடியும். அதற்கேற்ப மேலாண்மை, கண்காணிப்பு, கட்டமைப்பு வசதி, தொடர் பராமரிப்புன்னு இதன்பின்னால ஏகப்பட்ட தொடர் செயல்பாடுகள் இருக்கு. கிராமச்சந்தைல இருக்கறமாதிரி இங்க யார்வேண்ணாலும் கடை வைத்துவிட முடியாது. பெரிய அளவுல முதலீடு தேவைப்படும். (மூவரும் வீட்டை அடைந்தார்கள்)

கீர்த்தனா அம்மா: எதுக்குமா இவ்வளவு பெரிய பொம்மை? ஏற்கனவே நிறைய பொம்மைங்க இருக்கே!

தாத்தா: விடும்மா. குழந்தை ஆசையா கேட்டா. நான்தான் வாங்கித்தந்தேன்.

அம்மா: மூர்த்தி ஒன்னும் வாங்கலையாப்பா?

மூர்த்தி: கீர்த்தனா, அவ ஆசைப்பட்ட பொம்மையை வாங்கிக்கிட்டா. நானும் என்

பொதியை ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு – செல்லக்கண்ணு
நீயும் வித்துப்போட்டுப் பணத்த எண்ணு
செல்லக்கண்ணு. பாடலாசிரியர்: மருதகாசி

படிப்புக்குத் தேவையான சந்தைபற்றிய விவரங்களைத் தாத்தாவிடம் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன். அந்தக் காலத்துச் சந்தையில மக்கள் பணத்தைவிட மனித மாண்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாங்க என்பதை நினைத்தாலே பெருமையா இருக்கு.

அம்மா: ஆமா, நானும் சந்தைக்குப் போயிருக்கேன். சந்தைன்னாலே சந்தோசம் தானா வரும். சரி வாங்க. தாத்தா ஊர்ச் சந்தையிலிருந்து வாங்கி வந்த காய்கறியில குழம்பு வெச்சுருக்கேன், சாப்பிடுங்க.

கற்பவை கற்றபின்...

1. சந்தை நிகழ்வுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.
2. சந்தை/அங்காடியில் இருக்கும் பொருள்களுக்கான விலைப்பட்டியல் எழுதிய விளம்பரப் பதாகை ஒன்றை உருவாக்குக.
3. சிறு வணிகர் ஒருவரிடம் நேர்காணல் செய்க.
   (எ.கா. சந்தைப் பொருள்கள் மீதமானால் என்ன செய்வீர்கள்?)
4. "கடன் அன்பை முறிக்கும் " இது போன்ற சொற்றொடர்களைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள் , சந்தைகளில் பார்த்து எழுதுக.

KG392V

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

இயல் இரண்டு

கற்கண்டு

ஆகுபெயர்

'கலாம் சாட் கண்டுபிடித்த பள்ளி மாணவனை ஊரே பாராட்டியது.'

'பெண்களைக் கேலி செய்த இளைஞரை ஊரே இகழ்ந்தது.'

இத்தொடர்களில் ஊர் பாராட்டுவதோ, திட்டுவதோ இல்லை. மாறாக, அவ்வூரில் உள்ள மக்கள் பாராட்டினர் / இகழ்ந்தனர் என்பது இதன் பொருள். ஊர் என்னும் பெயர், ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது. இதனை இடவாகுபெயர் என்பர்.

ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். தொல்காப்பியர் ஆகுபெயர்களை ஏழாகவும் நன்னூலார் பதினைந்தாகவும் வகைப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில–

முல்லையைத் தொடுத்தாள்		பொருளாகுபெயர் (முதலாகுபெயர்) – முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை(உறுப்பு)யாகிய பூவுக்கு ஆகி வந்தது.
வகுப்பறை சிரித்தது		இடவாகுபெயர் – வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது.
கார் அறுத்தான்		காலவாகுபெயர் – கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.
மருக்கொழுந்து நட்டான்		சினையாகுபெயர் – மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகிவந்தது.
மஞ்சள் பூசினாள்		பண்பாகுபெயர் – மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது.
வற்றல் தின்றான்		தொழிலாகுபெயர் – வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வந்தது.
வானொலி கேட்டு மகிழ்ந்தனர்		கருவியாகுபெயர் – வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது.
பைங்கூழ் வளர்ந்தது		காரியவாகுபெயர் – கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 48 10-07-2018 12:59:34

அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்		கருத்தாவாகுபெயர் – அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது.
ஒன்று பெற்றால் ஒளிமயம்		எண்ணலளவை ஆகுபெயர் – ஒன்று என்னும் எண்ணுப் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது.
இரண்டு கிலோ கொடு		எடுத்தலளவை ஆகுபெயர் – நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.
அரை லிட்டர் வாங்கு		முகத்தலளவை ஆகுபெயர் – முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.
ஐந்து மீட்டர் வெட்டினான்		நீட்டலளவை ஆகுபெயர் – நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

கற்பவை கற்றபின்...

KGL166

1. ஆகுபெயரைக் கண்டறிக.
   அ. தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள்.
   தமிழரசி வள்ளுவரைப் படித்தாள்.
   ஆ. மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது.
   நாடும் வீடும் நமது இரு கண்கள்.
   இ. கலைச்செல்வி பச்சைநிற ஆடையை உடுத்தினாள்.
   கலைச்செல்வி பச்சை உடுத்தினாள்.
   ஈ. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
   நாலடி நானூறும் இரண்டடித் திருக்குறளும் வாழ்வுக்கு உறுதி தரும்.
   உ. ஞாயிற்றை உலகம் சுற்றி வருகிறது.
   நீங்கள் கூறுவதை உலகம் ஏற்குமா?
2. ஆகுபெயர் அமையுமாறு தொடர்களை மாற்றி எழுதுக.
   அ. மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.
   ஆ. இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்.
   இ. நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்.
   ஈ. நீரின்றி இவ்வுலக மக்களால் இயங்க முடியாது.

சிந்தனை வினா

1. தற்காலப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
2. பட்டப் பெயர்கள் ஆகுபெயர்கள் ஆகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 49 10-07-2018 12:59:34

மதிப்பீடு

KGUH7T

பலவுள் தெரிக.

1. அஃகசாலை என்பது ……………………….த்தைக் குறிக்கும்.

அ) அங்காடிகள் அமைந்துள்ள இடம் ஆ) யவனர்கள் இருக்கின்ற இடம்

இ) நாணயங்கள் அச்சடிக்கும் இடம் ஈ) அரேபியர்களின் பந்தர் இடம்

2. கூற்று 1 – காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் துறைமுகமாகும்.

கூற்று 2– வண்டியூர் என்னும் ஊர் காஞ்சி மாநகரத்தில் அமைந்துள்ளது.

அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1, 2 தவறு

இ) கூற்று 2 சரி, 1 தவறு ஈ) கூற்று 1 சரி, 2 தவறு

3. 'யவனப்பிரியா' என்பது எதனைக் குறிக்கும்?

அ) மிளகு ஆ) முத்து இ) சங்கு ஈ) தந்தம்

4. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள்

அ) பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆ) குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து

இ) மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு ஈ) மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை

5. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க.

- காவிரியாற்றின் கழிமுகம் ஆழமாகவும், அகலமாகவும் இருந்தது.
- பகலில் இயங்கும் கடைகள் நாளங்காடிகள்.

அ) காவிரியாற்றின் கழிமுகம் எதற்காக அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எவ்விதம் அழைக்கப்பட்டன?

ஆ) காவிரியாற்றின் கழிமுகம் எவ்வாறு அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

இ) காவிரியாற்றின் கழிமுகம் எங்கு அமைந்திருந்தது? – பகலில் கடைகள் எவ்வாறு இயங்கின?

ஈ) காவிரியாற்றின் கழிமுகம் எதனால் அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எப்படி அழைக்கப்பட்டன?

குறு வினா

1. 'மதுரைக்காஞ்சி' – பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
2. எதன் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது?
3. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.
4. பண்டைத் தமிழர்களின் துறைமுகப் பயன்பாடு யாது?
5. நாலுமலை கொண்ட பெருநகரம் – இவ்வடிகளில் குறிக்கப்படும் மலைகள் யாவை?

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 50 10-07-2018 12:59:35

சிறுவினா

1. "மாகால் எடுத்த முந்நீர்போல" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
2. கொற்கை – சிறுகுறிப்புத் தருக.
3. சந்தைக்கும் பல்பொருள் அங்காடிக்குமான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.
4. காவிரிப்பூம்பட்டினம் குறித்து இலக்கியங்களில் இடம்பெற்ற கருத்துகள் யாவை?
5. ஏறுதழுவுதல் காளைகளால் – தோள்

   ஏறுமே கம்பீரம் மாலைகளால் – இவ்வடிகள் சுட்டும் வீரவிளையாட்டு பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

நெடுவினா

1. பண்டைய துறைமுகங்கள் பற்றி விவரித்து எழுதுக.
2. எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

மொழியை ஆள்வோம்

படித்துச் சுவைக்க.

ஏரால் விளையும் உணவுப் பொருள்களை எல்லாம் ஒரு சொல்லால் உணர்த்தினர் தமிழ்நாட்டார். இக்காலத்தில் மளிகைக் கடை என்பது பலசரக்குக் கடையின் பெயராக வழங்குதல் போன்று, முற்காலத்தில் கூலக்கடை என்பது பலவகைத் தானியங்கள் விற்கும் கடைக்குப் பெயராக அமைந்தது. நெல்லும் புல்லும், வரகும் தினையும், எள்ளும் கொள்ளும், அவரையும் துவரையும், பயறும் உளுந்தும், சாமையும் பிறவும் கூலம் என்ற ஒரு சொல்லாலே குறிக்கப்பட்டன. பெரிய நகரங்களில் கூலவீதிகள் சிறந்திருந்தன. சோழநாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திலும், பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையிலும் 'கூலங்குவித்த கூல வீதிகள்' இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இன்றும் கூலவீதியைத் திருநெல்வேலியிலே காணலாம். மேலரத வீதியை அடுத்துள்ள தெரு, 'கூலக்கடைத் தெரு' என்றே இதுகாறும் வழங்கி வருகின்றது. மதுரை மாநகரில் கூலக்கடை வைத்திருந்த சாத்தனார் 'கூலவணிகன் சாத்தனார்' என்று பெயர் பெற்றார். அவரே மணிமேகலைக் காவியம் இயற்றிய கவிஞர் என்பர். அந்நாளில் இசையரங்குகளிலும், நடன சாலைகளிலும் உழவரை வாழ்த்தும் வழக்கம் இருந்ததாகத் தெரிகின்றது. நாடாளும் மன்னனை வாழ்த்திய பின்பு, உணவளிக்கும் உழவனை வாழ்த்துவர் இசைவாணர். 'பதினெண் கூலமும் உழவர்க்கு மிகவே' என்னும் வாழ்த்துரை ஒரு பழைய இசை நூலிற் காணப்படுகின்றது.

– சொல்லின் செல்வர் ரா.பி.சே.

மொழிபெயர்க்க.

Everyone wants a happy life. To some it means three meals a day and a roof over their head, while for others; it means the most luxurious life with a grand mansion, hundreds of cars and near unlimited supply of cash in the bank. But no matter what type of life you desire, it is your deeds, your attitude towards life that carves your personality and shapes your life. So, have the most positive attitude towards life. If life throws a hundred reasons at you to cry, show it that you have a thousand reasons to smile.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

தொடரில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து நீக்குக.

1. மலையேறிய மக்கள் மாலையின் வேகவேகமாய்க் கீழிறங்கின.
2. எங்கள் ஊர் சந்தையில் காய்க்கறிகள் கிடைக்கும்.
3. பண்டைத் துறைமுகங்களில் ஏற்றுமதிச் செய்யப்பட்டது.
4. சிட்டுக்கு சிறகுகள் முளைத்தது.

கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆகுபெயர்களை அட்டவணைப்படுத்துக.

விமலா கூடத்தில் உள்ள தட்டிலிருந்த டிசம்பரைத் தலையில் சூடிக்கொண்டாள். மல்லிகையைப் படத்திற்குச் சூட்டினாள். அடுப்பிலிருந்து பாலை இறக்கினாள். பின்பு தோட்டத்திற்குச் சென்றாள். விமலாவைப் பார்த்தவுடன் தோட்டம் அமைதியானது! "தலைக்கு இருநூறு கொடுங்கம்மா" என்று தோட்டத்தில் வேலை செய்தவருள் ஒருவர் சொன்னார். வெள்ளை மனங்கொண்ட வேலையாட்களின் கூலியைக் குறைக்க விரும்பாமல் அதனை அவளும் ஏற்றுக்கொண்டாள். அவர்கள் சென்றதும், காலையில் சாப்பிடப் பொங்கல் வைத்தாள். வீட்டில் சமையல் செய்ய, எந்தெந்தப் பொருள்கள் குறைவாக உள்ளன என்பதைப்பற்றிச் சிந்தித்தாள். "சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும். தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்க வேண்டும். துணி உலர்த்துவதற்கு நான்கு மீட்டர் வாங்க வேண்டும்" எனத் திட்டமிட்டாள். அலைபேசி அழைத்தது. அரை நிமிடம் அலைபேசியில் வந்த வயலின் கேட்டு மகிழ்ந்தாள். பிறகு எடுத்துப் பேசினாள். கடைக்குப் போய்விட்டு வந்த பிறகு, பாதியில் விட்டிருந்த சிவசங்கரியைப் படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாள்.

வரைபடத்தை உற்றுநோக்கி வினாக்களுக்கு விடையளிக்க.



அ. வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள பண்டைய நகரங்கள் எவை?

ஆ. பண்டைய நகரங்களாகவும் துறைமுகங்களாகவும் விளங்கி, இன்று அகழாய்விற்குரிய இடங்களாகத் திகழ்வன எவை?

இ. பண்டைத் துறைமுகம், இன்றைய துறைமுகம் – வரைபடம் உணர்த்தும் வேறுபாடுகளைச் சுட்டுக.

ஈ. முத்துக் குளித்தலுக்குப் பெயர்பெற்ற துறைமுகங்கள் ………… …………

உ. புகழ்பெற்ற பண்டைத் துறைமுகங்கள் இன்று இல்லாமைக்கான காரணங்களைச் சிந்தித்து எழுதுக.

ஆகுபெயர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

விளைச்சல், பால், முழம், மதுரை, வெள்ளை, பள்ளி.

(எ.கா.) இந்த ஆண்டில் நல்ல விளைச்சல் பெற்றான்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 52 10-07-2018 12:59:35

பயண அனுபவங்களை விவரிக்க.

"எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

மொழியோடு விளையாடு

சொற்றொடரில் ஒளிந்துள்ள தமிழ்நாட்டின் துறைமுகங்களைக் கண்டறிந்து எழுதுக.

1. கல்வியில் தடம் பதித்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
2. பூம்பொழில் புகும் கார்கால மேகம்.
3. தூக்கத்தில் துள்ளிக் குதிக்கும் கரடி.
4. எட்டும் தொண்ணூறும் எண்ணுப்பெயர்கள்.

(எ.கா.) கல்வியில் தடம் பதித்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் – கடலூர்

அகராதியில் காண்க.

தரங்கம், தொள்ளை, நியமம், பாடிலம், மாறன்

வட்டத்திற்குள் உள்ள எழுத்துகளைக்கொண்டு சொற்களை உருவாக்குக.



காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

வினைமுற்றை வினையாலணையும் பெயராக்கித் தொடர்களை இணைக்க.

1. நேற்று ஒருவன் வந்தான்; அவன் என் தம்பி.
2. அவர் மகிழுந்தை நிறுத்தினார்; வீட்டிற்குள் நுழைந்தார்.
3. கூண்டுக்குள் கிளியைக் கண்டார்; அதை வானில் பறக்கவிட்டார்.
4. எனக்குக் கவிதை நூலைத் தருவார்; அவரே அதன் பதிப்பாளர்.

(எ.கா.)

மதுரையில் தமிழ் வளர்க்கச் சங்கம் அமைத்தார்கள்; அவர்கள் பாண்டிய மன்னர்கள்.

மதுரையில் தமிழ் வளர்க்கச் சங்கம் அமைத்தவர்கள் பாண்டிய மன்னர்கள்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 53 10-07-2018 12:59:35

செயல்திட்டம்

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களின் பட்டியலை உருவாக்குக.

நிற்க அதற்குத் தக

எனது வகுப்பு எனது பணிகள்

அ) வகுப்பறைச் செயல்பாடுகளில் ஈடுபாட்டுடன் இருத்தல்

ஆ) வகுப்பறையைத் தூய்மையாக வைத்துக் கொள்வது.

இ) ………………………………………………………………

ஈ) ………………………………………………………………

கலைச்சொல் அறிவோம்

கழிமுகங்கள் – *Estuaries*, கலங்கரைவிளக்கம் – *Lighthouse*, துறைமுகங்கள் – *Ports*

பண்டமாற்றுமுறை – *Commodity Exchange*, இளநீர் – *Tender Coconut*, அகழி – *Moat*

கரும்புச் சாறு – *Sugarcane Juice*, காய்கறி வடிசாறு – *Vegetable Soup*

அறிவை விரிவு செய்

1. நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் – முனைவர் சு. சக்திவேல்
2. தரங்கம்பாடி தங்கப் புதையல் – பெ. தூரன்
3. இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) – ச. தமிழ்ச்செல்வன்

இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/ta/library-ln00204-html-ln00204p05-274940
http://www.msuniv.ac.in/ddce/Blitt/DLL%2015.pdf
http://www.tamilsurangam.in/literatures/patthu_paddu/maduraikanchi_1.html#.Wqoay-huZPY
https://tamil.mapsofindia.com/tamil-nadu/madurai/madurai-district-map.html

இணையச் செயல்பாடுகள்



ஆகுபெயரை அடையாளம் காண்போமே!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி ஆகுபெயர் என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன் ஆகுபெயர் பற்றிய விளக்கமும் அதன் வகைகளும் எடுத்துக்காட்டுடன் கொடுக்கப்பட்டிருக்கும்.
- அதனைத் தெளிவுற அறிந்த பின்பு திரையின் கீழ் வரும் தேர்வு என்பதைத் தேர்ந்தெடுத்து, கொடுக்கப்படும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=appinventor.ai_ngmukun.aagupeyar



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 54 10-07-2018 12:59:36

வாழ்வியல்

இயல் இரண்டு

திருக்குறள்

KH4S9G

புல்லறிவாண்மை

1) *ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்*
போஒம் அளவுமோர் நோய்.

சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல்
இருப்பவன் உயிர், சாகும்வரை உள்ள நோய்!

2) *காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்*
கண்டானாம் தான்கண்ட வாறு.

அறிவில்லாதவனுக்கு அறிவுரை சொல்பவன் அறிவில்லாதவனாக மாறிவிடுவான்!
அறிவில்லாதவன் அவனுக்குத் தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்!

இகல்

3) *இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்*
துன்பத்துள் துன்பங் கெடின்.

துன்பத்தில் மனக்கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால்,
இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம் .

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 55 10-07-2018 12:59:36

குடிமை

4) *அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.**

கோடிப் பொருள் அடுக்கிக் கொடுத்தாலும்,
ஒழுக்கமான குடியில் பிறந்தவர், தவறு செய்வதில்லை.

சான்றாண்மை

5) *அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)*
*ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும் அனைவரிடமும் இணக்கமும் இரக்கமும் உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்!
அணி – ஏகதேச உருவக அணி

6) *ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
மாற்றாரை மாற்றும் படை.

செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல். அதுவே
சான்றோர்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவி.

7) *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)*
ஆழி எனப்படு வார்.

ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக்
கரை போன்றவர் நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார்!

அணி – ஏகதேச உருவக அணி

நாணுடைமை

8) *பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்*
*அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர் வெட்கப்படும் பழிக்குக் காரணமாய் இருந்தும் தான் வெட்கப்படவில்லை என்றால், அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்.

உழவு

9) *சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.**

பல தொழில்களால் இயங்கினாலும் உலகம் ஏருக்குப் பின்னாலேயே போகும்! அதனால் வருந்தி உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

10) *உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ்து ஆற்றாது*
எழுவாரை எல்லாம் பொறுத்து.

மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால், அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவர்.

அணி – ஏகதேச உருவக அணி

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 56 10-07-2018 12:59:36

கற்பவை கற்றபின்...

KHDNB4

1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க

அ. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

இ. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

கண்டானாம் தான்கண்ட வாறு	பகைவரையும் நட்பாக்கும் கருவி
அறம்நாணத் தக்கது உடைத்து	தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்
மாற்றாரை மாற்றும் படை	அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்

3. ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்

இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.

ஒ	ப்	பு	று
க	ப	ர	வ
ட	டை	வு	த
ல்	உ	ழ	வ
ம்	ற	அ	ர்

அ. அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் ....

ஆ. உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ......

இ. தான் நாணான் ஆயின் ...... நாணத் தக்கது.

ஈ. ஆழி என்பதன் பொருள் ......

உ. மாற்றாரை மாற்றும் ....

ஊ. ஒழுக்கமான குடியில் பிறந்தவர் ...... செய்வதில்லை.

5. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்கக்கதை ஒன்றை எழுதுக.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 57 10-07-2018 12:59:37

வினாக்கள்

1) இறக்கும்வரை உள்ள நோய் எது?

2) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.
இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்கி எழுதுக.

3) உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?

4) காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.
இக்குறட்பாவில் பயின்றுவரும் தொடைநயத்தை எழுதுக.

இணையச் செயல்பாடுகள்

திருக்குறள் – விளையாடிப் பார்ப்போமே!



படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தித் திருக்குறள் விளையாட்டு என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியின் அறிவுரையைத் தொடர்ந்து **விளையாடு** என்பதைத் தெரிவு செய்தவுடன் மாணவர், ஆசிரியர், பேராசிரியர் என்பதில் ஒன்றைத் தெரிவு செய்க.
- இப்போது மிதக்கும் சீர்களைச் சரியான இடத்தில் பொருத்தி முழுமையான குறளைக் கண்டறிக. அக்குறளுக்கான விளக்கத்தை அதைத் தொடர்ந்து பார்க்க.



படி–1



படி–2


படி–3

செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.nilatech.thirukkuralvilaiyaattu

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 58 10-07-2018 12:59:37

இயல் மூன்று

கலை பல வளர்த்தல்

கற்றல் நோக்கங்கள்

- *தமிழர் சிற்பக் கலையின் வரலாற்றுச் சிறப்பைப் போற்றுதல்*
- *இலக்கியம் காட்டும் ஐவகை நிலங்களின் அழகை நுகர்ந்து அவற்றை விவரித்து எழுதுதல்*
- *சிறுகதை அமைப்பில் தமிழர் இசைக் கலையின் சிறப்பை உணர்தல்*
- *புதியன சிந்தித்துக் கவிதை படைத்தல்*
- *புணர்ச்சி இலக்கண அடிப்படைகளை அறிந்து பயன்படுத்தல்*

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 59 10-07-2018 12:59:37

உரைநடை உலகம்

இயல் மூன்று

சிற்பக்கலை

நுழையும்முன்

கல்லிலும், உலோகத்திலும் கருவிகள் செய்த மனிதன், அவற்றில் சிற்பமென்னும் நுண்கலையை வடிக்கத் தொடங்கினான். மனித நாகரிக வளர்ச்சியின் தொடக்கமாக இதைக் கொள்ளலாம். உயிரற்ற கல்லிலும் உலோகத்திலும் தமிழர் மன உணர்வுகளையும் நிகழ்வுகளையும் செதுக்கிவைத்த சிற்பங்கள், இன்றும் வரலாற்றின் வாயில்களாக விளங்குகின்றன. தமிழர் அழகியலின் வெளிப்பாடுதான் நாம் காணும் சிற்பங்கள். தமிழ்ச் சிற்பிகள் கல்லில் வடித்த கவிதைகளே சிற்பங்கள்.

புலிக்குகை, மகாபலிபுரம்

கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனலாம்.

'கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குஉறுப் பாவன"

என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. மணிமேகலையிலும் இத்தகு குறிப்புகள் காணப்படுகின்றன.

சிற்பங்களின் வகைகள்

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம். அவ்வாறின்றி முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம். இத்தகு சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 60 10-07-2018 12:59:38

இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப் பகுதி, கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள், சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது.

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கின்றனர்.

பல்லவர் காலச் சிற்பங்கள்

பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

தெரியுமா?

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.

பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன.

காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் (முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வ உருவங்களும் பிற சிற்பங்களும் கோவிலின் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.

பாண்டியர் காலச் சிற்பங்கள்

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான்கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

சோழர்காலச் சிற்பங்கள்

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 61 10-07-2018 12:59:38

சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பக்கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோவில் சிற்பங்கள் அழகானவை. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சோழர் கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். சோழர்காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

விஜயநகர மன்னர் காலச் சிற்பங்கள்

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள்

தெரியுமா?

தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியிலிருந்து ஆண்டுதோறும் சிற்பக் கலைஞர்கள் பலர் உருவாகின்றனர். சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம். இக்கலைத்துறையில் மிகுதியான வேலைவாய்ப்புகள் உள்ளன. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 62 10-07-2018 12:59:38

எழுப்பப்பட்டன. அக்கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. அவர்கள் தெலுங்கு, கன்னடப்பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக் கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது. ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின. கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டன. குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம் பெறச் செய்தனர். வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன்கால்களைத் தூக்கி நிற்பது போன்ற சிற்பங்களை மண்டபத் தூண்களில் அமைத்தனர். அத்துடன் பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அவர்கள் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

நாயக்கர் காலச் சிற்பங்கள்

நாயக்க மன்னர் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். அம்மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்களைச் செதுக்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம்

பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில் போன்ற இடங்களில் கலைநயம் மிக்க சிற்பங்களைக் காணமுடியும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் கண்ணப்பர், குறவன் குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம். விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன்அவை படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

பௌத்த–சமணச் சிற்பங்கள்

பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள், புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த (கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர். சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன.

சான்றாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 63 10-07-2018 12:59:38

அது போலவே மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாறைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

தனிச்சிறப்புகள்

பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன. யோகக்கலை, நாட்டியக்கலைக் கூறுகளும் தமிழகச் சிற்பக்கலையில் இடம் பெற்றுள்ளன.

இன்றைய சிற்பக்கலை

தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கல், பைஞ்சுதை (சிமெண்ட்), கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. வெண்கலம் முதலான உலோகங்களாலும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன. இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்தும் பலதுறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது. பெரும் அரங்குகளில், காட்சிக்கூடங்களில், வரவேற்பறைகளில் காணப்படுகிற கலைநயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்திமிகு சிற்பங்கள் முதலானவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறை சாற்றுகின்றன.

KHHFEE

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களாகக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல! அவை வரலாற்றுப் பதிவுகளாகும்; மனித அறிவு வளர்ச்சியின் முதிர்ச்சியாகும்; அத்தகு சிறப்புமிக்க சிற்பக் கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

கற்பவை கற்றபின்...

1. உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக் குறிப்பை உருவாக்குக.
2. ஓவியர்/சிற்பி/இசைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்து அவர் கூறும் கலை நுட்பங்களையும் அனுபவங்களையும் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 64 10-07-2018 12:59:39

கவிதைப் பேழை

இயல் மூன்று

இராவண காவியம்

KI6BG2

நுழையும்முன்

பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை; அடர்ந்து வளர்ந்த பசுமரங்கள்; நீர் நிறைந்த நதிக்கரைகள்; பச்சை போர்த்திய புல்வெளிகள்; துள்ளித் திரியும் மானினங்கள்; மயில்கள், குயில்கள், கிளிகள் பறந்து திரியும் பறவைகளென இத்தகு அழகிய சூழலைக் கண்டு மனம் மகிழ்ந்ததுண்டா? அழகைச் சுவைத்தால் மனம் புத்துணர்வு பெறும்; எண்ணம் வளமை பெறும். தமிழ் இலக்கியத் திரையில் மிகுதியான எழிலோவியங்களைச் சொல்லோவியங்களாகப் புலவர்கள் தீட்டி வைத்துள்ளனர். அவற்றில் சில காட்சிகளைக் கண்டு சுவைப்போம் வாருங்கள்.

குறிஞ்சி

அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால். (49)

அடுப்பிடு சாந்தமோடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும்
மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்
கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே (52)

சொல்லும் பொருளும்: மைவனம் – மலைநெல்; முருகியம்– குறிஞ்சிப்பறை; பூஞ்சினை–பூக்களை உடைய கிளை; சிறை– இறகு; சாந்தம் – சந்தனம்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 65 10-07-2018 12:59:39

முல்லை

பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும்
பாஇசை பாடமுப் பழமும் தேனும்தந்
தேஇசை பெறும்கடறு இடையர் முக்குழல்
ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால் (58)

முதிரையும் சாமையும் வரகும் பொய்மணிக்
குதிரைவா லியும்களம் குவித்துக் குன்றுஎனப்
பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்
அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே! (60)

சொல்லும் பொருளும்: பூவை– நாகணவாய்ப் பறவை; பொலம்– அழகு; கடறு– காடு; முக்குழல்–கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்; பொலி– தானியக்குவியல்; உழை– ஒரு வகை மான்.

பாலை

மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ
இன்னிளம் குருளைமிக்கு இனைந்து வெம்பிடத்
தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற
நன்னரில் வலியசெந் நாய்உ ய ங்குமே. (65)

கடிக்கமழ் மராமலர்க் கண்ணி அம்சிறார்
படிக்குற எருத்துக்கோடு அன்ன பாலைக்காய்
வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்
அடிக்கும் ஓசையின்பருந்து அஞ்சி ஓடுமே (67)

சொல்லும் பொருளும்: வாய்வெரீஇ– சோர்வால் வாய் குழறுதல்; குருளை– குட்டி; இனைந்து– துன்புறுதல்; உயங்குதல்– வருந்துதல். படிக்குஉற– நிலத்தில் விழ; கோடு– கொம்பு;.

மருதம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும் (72)*

மரைமலர்க் குளத்தில் ஆடும்
மயிர்த்தலைச் சிறுவர் நீண்ட
பொருகரிக் குருத்து அளந்து
பொம்மெனக் களிப்பர் ஓர்பால்
குரைகழல் சிறுவர் போரில்
குலுங்கியே தெங்கின் காயைப்
புரைதபப் பறித்துக் காஞ்சிப்
புனைநிழல்அருந்து வாரே. (77)

சொல்லும் பொருளும்: கல்–மலை; முருகு– தேன், மணம், அழகு; மல்லல்– வளம்; செறு– வயல்; கரிக்குருத்து– யானைத்தந்தம்; போர்– வைக்கோற்போர்; புரைதப– குற்றமின்றி.

நெய்தல்

பசிபட ஒருவன் வாடப்
பாத்துஇனி இருக்கும் கீழ்மை
முசிபட ஒழுகும் தூய
முறையினை அறிவார் போல
வசிபட முதுநீர் புக்கு
மலையெனத் துவரை நன்னீர்
கசிபட ஒளிமுத் தோடு
கரையினில் குவிப்பார் அம்மா (82)

வருமலை அளவிக் கானல்
மணலிடை உலவிக் காற்றில்
சுரிகுழல் உலர்த்தும் தும்பி
தொடர்மரை முகத்தர் தோற்றம்
இருபெரு விசும்பிற் செல்லும்
இளமைதீர் மதியம் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங்
காட்சி போல்தோன்று மாதோ. (84)

சொல்லும் பொருளும்: தும்பி– ஒருவகை வண்டு; துவரை–பவளம்; மரை– தாமரை மலர்; விசும்பு– வானம்; மதியம்–நிலவு.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 66 10-07-2018 12:59:39

பாடலின் பொருள்

1. அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தானறிந்த தமிழிசையைப் பாடும்; பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான சிறகினை விரித்து ஆடும்; இக்காட்சியினைப் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினம் மிரட்சியுடன் பார்க்கும்

2. தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும் உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும் காந்தள் மலரின் ஆழ்ந்த மணமும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் எல்லா இடங்களிலும் உள்ள பொருள்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

3. நாகணவாய்ப் பறவைகளும் குயில்களும் அழகுமிக்க வண்டுகளும் பாவிசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில மக்களான ஆயர், முக்கனியும் தேனும் சேகரித்துக் கொண்டு முக்குழல் இசையால் மேயும் பசுக் கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.

4. முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்று போலக் குவித்து வைத்திருப்பர். கதிரடிக்கும் அதிர்வு தரும் ஓசையைக் கேட்டு மான்கள் அஞ்சி ஓடும்.

5. கொடிய பாலைநிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டி வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்டு அதன் தாய் வருந்தியது. குட்டி இளைப்பாற எங்கும் நிழலில்லை. எனவே கடும் வெயிலில் தான் துன்புற்று நின்று, தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

தெரிந்து தெளிவோம்

"இராவண காவியம் காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி. உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" – பேரறிஞர் அண்ணா

6. சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

7. மலையிடையே தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பும் குளத்து நீரும் முல்லை நிலத்தின் அழகிய காட்டாறும் மருத நிலத்தில் பாய்ந்தோடும்; அங்கு நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் நீரினைக் கால்வாய்வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் நிறைந்த மருதநில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும்.

8. தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

9. தூய ஒழுக்கமுறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள். அதுபோலத் தான் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டு வந்து குவிப்பர்.

10. தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 67 10-07-2018 12:59:39

இலக்கணக் குறிப்பு

இடிகுரல்– உவமைத்தொகை; இன்னுயிர்– பண்புத்தொகை; பிடிபசி– வேற்றுமைத்தொகை. பைங்கிளி– பண்புத்தொகை;

பூவையும் குயில்களும், முதிரையும், சாமையும், வரகும்– எண்ணும்மைகள். பெருங்கடல், முதுவெயில், இன்னிளங்குருளை– பண்புத்தொகைகள்; அதிர்குரல் – வினைத்தொகை; மன்னிய– பெயரெச்சம்; வெரீஇ– சொல்லிசை அளபெடை; கடிகமழ்– உரிச்சொற்றொடர்; மலர்க்கண்ணி– மூன்றாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன் தொக்க தொகை;

எருத்துக்கோடு– ஆறாம் வேற்றுமைத்தொகை; கரைபொரு– இரண்டாம் வேற்றுமைத் தொகை; மரைமுகம்– உவமைத்தொகை; கருமுகில்– பண்புத்தொகை; வருமலை– வினைத்தொகை;

பகுபத உறுப்பிலக்கணம்

பருகிய = பருகு+இன்+ ய்+அ;

பருகு – பகுதி;

இன்– இறந்த கால இடைநிலை
(ன் கெட்டது விகாரம்);

ய் –உடம்படுமெய்; அ –பெயரெச்ச விகுதி

பூக்கும் = பூ + க் + க் + உம்;

பூ – பகுதி; க் – சந்தி

க் – எதிர்கால இடைநிலை;

உம் – வினைமுற்று விகுதி

தெரிந்து தெளிவோம்

கோர்வை/ கோவை : கோ என்பது வேர்ச்சொல். கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி. (எ.கா.) ஆசாரக்கோவை,
ஊசியில் நூலைக் கோத்தான்.

நூல் வெளி

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது. இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது. தமிழகக் காண்டத்திலுள்ள பாடல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.

கற்பவை கற்றபின்...

1. *ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம்/ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் படக் கட்டுரையாக்குக.*

2. *இப்பாடப்பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சியினை ஓவியமாகத் தீட்டுக/ கவிதை வடிக்க.*

3. *வைக்கோற் போர், நெற்குதிர், போரடிக்கும் களம் போன்ற உழவுத் தொழிலோடு தொடர்புடையவற்றின் விளக்கங்களைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.*

KIF7HP

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 68 10-07-2018 12:59:40

கவிதைப் பேழை

இயல் மூன்று

நாச்சியார் திருமொழி

KIP3JC

நுழையும்முன்

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்றுதலும் அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணியாக இருந்தது. இறையை நாயகனாக எண்ணி நாயகி பாவத்தில் பாடுவதும் காணப்படுகிறது. இப்பாவத்தில் பெண் கவிஞர் ஒருவர் பாடுவது உண்மைக் காதலெனக் கருதவைக்கிறது. ஆண்டாள் பாடியதால் அவர் திருமால் மீது காதல் கொண்டு பாடியதாகக் கொள்கின்றனர். அழகியலுக்கும் பக்திக்கும் இடம் தருகிற ஆண்டாள் கவிதைகள் கற்பவர் மனத்தைக் கவர்கின்றன.

கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டுஎங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.

(560)

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

(561)

சொல்லும் பொருளும்: தீபம் – விளக்கு; சதிர் – நடனம்; தாமம் – மாலை

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 69 10-07-2018 12:59:40

பாடலின் பொருள்

1. 'ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்துகொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

2. 'மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், என்னைத் திருமணம் செய்துகொள்கிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

தெரிந்து தெளிவோம்

பெண்ணின் திருமண வயது 18; ஆணின் திருமண வயது 21 என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

கொட்ட – வினையெச்சம்

முத்துடைத்தாமம் – இரண்டாம் வேற்றுமைத் தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

தொட்டு – தொடு (தொட்டு) + உ

தொடு – பகுதி, தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது – விகாரம்

உ – வினையெச்ச விகுதி

கண்டேன் – காண் (கண்) + ட் + ஏன்

காண் – பகுதி('கண்' எனக் குறுகியது விகாரம்), ட் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

நூல் வெளி

திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார். இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என அழைக்கப்பெற்றார். இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர். ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" ஆகும். இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன. நாச்சியார் திருமொழி மொத்தம் 140 பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதியின் இரு பாடல்கள் ஆறாம் திருமொழியில் இடம்பெற்றுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. திருப்பாவையில் இடம்பெற்றுள்ள தொடைநயம் மிக்க பாடல்களுள் எவையேனும் இரண்டினை இணையத்திலோ நூலகத்திலோ இருந்து திரட்டி வகுப்பறையில் பாடுக.

2. கண்ணனைப் பல்வேறு உறவுநிலைகளில் வைத்துப் பாடிய பாரதியார் பாடல்களுள் உங்களைக் கவர்ந்த பாடல்களைக் குறித்துக் கலந்துரையாடுக.

3. சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள பெண் புலவர்களின் சில கவிதைகளைக் கொண்டு ஒரு கவிதைத் தொகுப்பு உருவாக்குக.

KIXYKZ

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 70 10-07-2018 12:59:40

இயல் மூன்று

விரிவானம்

செய்தி

– தி. ஜானகிராமன்

KJ7UHH



இசை மொழியைக் கடந்தது. அமைதியின் நாக்காக அது எல்லா மொழிகளையும் பேசுவது; மனங்களைக் கரைத்து அந்தரவெளியில் உலவச் செய்வது; சொற்களைப் புறக்கணித்துத் தனக்குள்ளிருக்கும் செய்தியை எந்தமொழி மனதிற்குள்ளும் செலுத்துவது. ஆரவாரங்கள், குழப்பங்கள், கூச்சல்கள், துயரங்கள் என எல்லாவற்றையும் கடந்த அமைதி வெளியில் மனங்களைக் கூட்டுவது. இசையின் செவ்வியில் தலைப்படும் மனமானது இனம், நாடு என்ற எல்லைக்கோடுகளைத் தாண்டிவிடும். இசை தாண்டவைக்கும்.

நாகசுர வித்வான் ஒற்றை மாட்டு வண்டியிலிருந்து இறங்கி, வக்கீல் வீட்டில் நுழைந்தார். மகன் தங்கவேலுவும், வாத்தியங்களைத் தூக்கிக்கொண்டு ஒத்துக்காரரும் பின்னால் வந்தார்கள்.

பெரிய ஹால். வாசலிலிருந்தே அவரைக் கையைப் பிடித்து அழைத்துப்போன வக்கீல் உள்ளே குழுமியிருந்த கோஷ்டியை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவர்தான் பிலிப் போல்ஸ்கா, இந்தச் சங்கீத கோஷ்டியின் தலைவர்."

"நிறைகுடம்னு சொன்னீங்கள்ள, ஞாபகமிருக்கா?" என்று வக்கீலைப் பார்த்தார்.

"இருக்கு."

"சரியான வார்த்தை! கண்ணைப் பாருங்க. முகம் எவ்வளவு அழகாயிருக்கு, பாத்தீங்களா?"

போல்ஸ்காவுக்குப் பிறகு, கூட வந்திருந்த இருபது இருபத்தைந்து பேருக்கும் வக்கீல், வித்வானை அறிமுகப்படுத்தினார்.

மேலே ஏறி உட்கார்ந்து ஒத்துக்காரன் ஆரம்பித்ததும், ஓலையைச் சரிபண்ணிக்கொண்டார். தங்கவேலு மேடைக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டான்.

நாட்டையைக் கம்பீரமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனத்தைத் தொடங்கினார்.

போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. விழி மேலே செருகியிருந்தது. அமிருத தாரையாகப் பெருக்கெடுத்த நாதப் பொழிவில் அவன் தன்னை இழந்துவிட்டான்போல் தோன்றிற்று. நாதம் அவனுடைய ஆத்மாவை, காணாத லோகங்களுக்கும் அநுபவங்களுக்கும் இழுத்துச் சென்றதுபோல் தோன்றிற்று. சளைத்துப்போய் ஆற்றோடு போகிறவனைப்போல், இஷ்டப்படி வெள்ளம் தன்னை அடித்துப் போகும்படி விட்டுவிட்டான் அவன்.

சட்டென்று நாதம் நின்றது. போல்ஸ்காவின் கண் இன்னும் அந்த அநுபவத்தில் திளைத்துக்கொண்டிருந்தது. மேலே செருகிய விழிகள் கீழே இறங்கிப் பார்க்க ஒரு நிமிஷம் ஆயிற்று.

டையும் கால்சட்டையுமாகச் சப்பணம் கட்டி அமர்ந்திருந்த அந்தக் கூட்டம் அசையாது பார்த்துக்கொண்டிருந்தது.

"ஐயா, ஒரு சின்னச் சோதனை வைக்கப்போறேன்" என்றார் வித்வான், வக்கீலைப்பார்த்து.

"என்ன!"

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 71 10-07-2018 12:59:40

"பாருங்களேன்."

வக்கீல் ஒன்றும் புரியாமல் அவரைப் பார்த்தார்.

"தஸரிமா . . . மா" என்று ஆரம்பித்தார்.

சாமா ராகம் என்று அடையாளம் கண்ட வக்கீல், வைத்த கண் எடுக்காமல் பார்த்தார். ராகம் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்துகொண்டிருந்தது. நடு நிசியில் தோட்டத்தில் மலர்ந்து மணத்தைப் பெருக்கும் – அமைதியான மணத்தை வீசும் – பவழமல்லியின் நினைவு அவருள்ளத்தில் தோய்ந்தது. அவரது தலை அங்கும் இங்கும் விட்டுவிட்டு வரும் அந்த மணத்திற்கு இசைவாக அசைந்துகொண்டிருந்தது. ராகம் வளர்ந்துகொண்டிருந்தது.

யாரோ கையாட்டுகிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தார் வக்கீல். போல்ஸ்காதான். அவன் உடல் ராகத்தோடு இசைந்து அசைந்துகொண்டிருந்தது. இரண்டு கைகளையும் எதையோ வாங்கிக் கொள்வதுபோல் நீட்டிக்கொண்டிருந்தான். முகத்தில் ஒரு புன்சிரிப்பு. சன்னதம் வந்தவன்மாதிரி அந்த முகம் நினைவிழந்து எங்கேயோ ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.

திடீரென்று உட்கார்ந்திருந்தவன் எழுந்துவிட்டான். கையை நீட்டியபடியே நின்றுகொண்டு, மெல்லிய காற்றில் அசையும் சம்பங்கி மரம் மாதிரி ஆடினான். ராகம் இன்னும் வளர்ந்தது.

நின்றுகொண்டிருந்தவன் அடியெடுத்து வைத்தான். கைகளை நீட்டி ஏந்திக்கொண்டே அடியெடுத்து வைத்தான். நடந்து நடந்து மேடை முன் வந்ததும், மெதுவாக முழந்தாளிட்டு உட்கார்ந்துகொண்டான். கையை மேடையோரத்தில் வைத்து முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

வக்கீலும் போல்ஸ்கா கோஷ்டியும் போல்ஸ்காவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். போல்ஸ்கா எந்த உலகத்தில் அலைகிறானோ? எந்த வானில் திரிகிறானோ?

அவன் தவத்தைக் கலைத்துவிடப் போகிறோமே என்று பயந்தாரோ என்னவோ வித்வான்? ராக ஆலாபனத்தைக் கூட ஓர் இடத்தில் நிறுத்தாமல் அப்படியே கீர்த்தனையைத் தொடங்கிவிட்டார்.

"சாந்தமுலேகா..." குழந்தையைக் கொஞ்சுகிறதுபோல அந்த அடி கொஞ்சிற்று. சத்தியத்தைக் கண்டு இறைஞ்சுவதுபோல் கெஞ்சிற்று.

போல்ஸ்காவின் மெய் சிலிர்த்தது, முதுகு ஒரு சொடுக்குடன் உலுக்கியதில் தெரிந்தது.

கீர்த்தனம் முடிந்தது. வாத்தியம் நின்றது.

மேடையில் கைவைத்து, முகத்தைப் புதைத்துக்கொண்டிருந்த போல்ஸ்கா ஓர் எட்டு எட்டி வித்வானின் கையைப் பிடித்தான், கெஞ்சுகிறாற்போல ஒரு பார்வை.

"வேறு ஒன்றையும் வாசிக்காதீர்கள். என் உயிர் போய்விடும் போல் இருக்கிறது. வேறு வேண்டாம்."

"சாந்தமுலேகாவையே திரும்பி வாசிக்கச் சொல்றார்" என்று நிசப்தத்தைக் கலைக்கத் துணிவில்லாமல் மெதுவாகச் சொன்னார் வக்கீல்.

மீண்டும் அதே நாதம் பொழிந்தது.

ஐந்து, ஆறு தடவை திருப்பித் திருப்பிக் கீர்த்தனத்தை வாசித்து முடித்தார். கடைசியில் நாதம் மௌனத்தில் போய் லயித்ததுபோல, இசை நின்றது.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 72 10-07-2018 12:59:44

போல்ஸ்கா அப்படியே தலையை அசைத்துக்கொண்டே இருந்தான். கோயில் மணியின் கார்வையைப்போல அந்த நிசப்தத்தில் அவன் தலையும் உள்ளமும் ஆத்மாவும் அசைந்து ஊசலிட்டுக்கொண்டிருந்தன. மூன்று நிமிஷம் ஆயிற்று.

வக்கீல் ஒரு பெருமூச்சு விட்டார். தொண்டையில் வந்த கரகரப்பை, பயந்து பயந்து கனைத்தார்.

திருப்பிப் பார்த்தான் போல்ஸ்கா.

"மிஸ்டர் மணி, இதில் ஏதோ செய்தி இருக்கிறது. ஏதோ போதம் கேட்கிறது. எனக்கு ஒரு செய்தி; எந்த உலகத்திலிருந்தோ வந்த ஒரு செய்தி கேட்கிறது. அந்தப் போதத்தில்தான் திளைத்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் எனக்கு வேகம் அடங்கவில்லை. செய்திதான் அது. எனக்காக அனுப்பிய செய்தி. உலகத்துக்கே ஒரு செய்தி. உங்கள் சங்கீதத்தின் செய்தி அது!"

குழந்தையைப்போல் சிரித்துக்கொண்டே நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் தடுமாறினான் போல்ஸ்கா.

"புரிகிறதா?" என்று கேட்டான்.

"புரிகிறாற்போல் இருக்கிறது" என்றார் வக்கீல்.

எனக்கு நன்றாகப் புரிகிறது. அது செய்தி. உலகத்திலேயே எந்தச் சங்கீதமும் இந்தச் செய்தியை எனக்கு அளிக்கவில்லை. இரண்டு கைகளையும் நீட்டி அதை நான் ஏந்தி வாங்கிக்கொண்டுவிட்டேன். ஒருவரும், ஒரு கலையும், ஒரு சங்கீதமும் கொடுக்காத செய்தியை நான் இப்போது பெற்றுக்கொண்டுவிட்டேன்.

"என்னாங்க?" என்று கேட்டார் வித்வான்.

வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார் கேள்வியை.

"என்ன தோன்றிற்று என்று கேட்கிறாரா? உலகம் முழுவதும் பிணக்காடாகக் கிடக்கிறது. ஒரே இரைச்சல், ஒரே கூச்சல், ஒரே அடிதடி: புயல் வீசி மரங்களை முறிக்கிறது. அலை உயர உயர எழுந்து குடிசைகளை முழுக அடிக்கிறது. இடி விழுந்து சாலையின் மரங்கள் பட்டுப்போகின்றன. கட்டிடம் இடிந்து விழுகிறது. எங்கே பார்த்தாலும் ஒரே இரைச்சல் . . . இந்தப் போர்க்களத்தில், இந்த இரைச்சலில், நான் மட்டும் அமைதியைக் காண்கிறேன்.

மெதுவாக இந்த இரைச்சல் தேய்ந்து, இந்தப் பிரளயக் கூச்சலும் இரைச்சலும் மெதுவாக அடங்கித் தேய்கிறது. ஓர் அமைதி என் உள்ளத்தில் எழுகிறது. இனிமேல் இந்த இரைச்சலும் சத்தமும் யுத்தமும் என்னைத் தொடாது. நான் எழுந்துவிட்டேன். அரவமே கேட்காத உயரத்திற்கு, மேகங்களுக்கும் புயலுக்கும் அப்பாலுள்ள உயர்விற்கு, எழுந்து,

தெரிந்து தெளிவோம் விருது மாலை

சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள்

1970 – அன்பளிப்பு (சிறுகதைகள்) – கு. அழகிரிசாமி

1979 – சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) – தி. ஜானகிராமன்

1987 – முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) – ஆதவன்

1996 – அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) – அசோகமித்ரன்

2008 – மின்சாரப்பூ (சிறுகதைகள்) – மேலாண்மை பொன்னுசாமி

2010 – சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) – நாஞ்சில் நாடன்

2016 – ஒரு சிறு இசை (சிறுகதைகள்) – வண்ணதாசன்

இதேபோல் மற்றவகை இலக்கியப் படைப்புகளுக்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்க.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 73 10-07-2018 12:59:44

சிறுகதை என்பது...

சிறுகதை என்றால் சிறிய கதை, கொஞ்சப் பக்கங்களில் முடிந்து விடுவது என்பதல்ல; சிறுகதை என்ற பிரிவு இலக்கியத்தில் அதில் எடுத்தாளப்படும் பொருள் பற்றியது; ஒரு சிறு சம்பவம், ஒரு மனோநிலை, மனநிலை ஆகியவற்றை மையமாக வைத்து எழுதப்படுவது; எடுத்து எழுதுவது. சிறுகதையில் சம்பவமோ, நிகழ்ச்சியோ அல்லது எடுத்தாளப்படும் வேறு எதுவோ அது ஒன்றாக இருக்க வேண்டும்.

சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. சாதாரணமான கதைகளில் இம்மூன்றும் படிப்படியாக வளர்ந்துகொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்க சிறுகதைகளில் பழைய சம்பிரதாயமான ஆரம்பம், முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய சம்பவத்தின் உச்சஸ்தானத்தில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்ற ஒன்று கிடையாது. அதாவது கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்.

– புதுமைப்பித்தன்

அங்கே அமைதியை, அழியாத அமைதியைக் கண்டுவிட்டேன். இந்த அமைதி எனக்குப் போதும். இப்போதே நான் இந்த அமைதியில் கலந்துவிடத் தயாராயிருக்கிறேன்."

அமைதியுடன்தான் பேசினான் போல்ஸ்கா. வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார்.

வித்வான் திகைத்துப் போனார்.

"அமைதியா, அப்படியா தோணித்து இவருக்கு!"

"ஆமாம்."

"அப்படித்தானே சொல்கிறார் இவர்."

"வார்த்தைகூடச் சொல்லலையே நான். எப்படி இவருக்குத் தெரிஞ்சுது?"

"மிஸ்டர் போல்ஸ்கா, இந்தப் பாட்டும் அமைதி வேணும் என்றுதான் அலறுகிறது. நீங்கள் சொன்ன புயல், இடி என்ற மாதிரியில் சொல்லாவிட்டாலும், அமைதி, அமைதி என்று அமைதியைத்தான் கடைசி லட்சியமாக இந்தப் பாட்டு இறைஞ்சுகிறது."

"அப்படியா!" என்று போல்ஸ்காவும் சமைந்துபோய்விட்டான்.

"செய்திதான் இது. நாதத்துக்குச் சொல்லவா வேண்டும்! எந்த வரம்பையும் கடந்து செய்தியை அது கொடுத்துவிடும்" என்றான் அவன்.

"இந்தக் கையைக் கொடுங்கள். வாசித்த இந்தக் கையைக் கொடுங்கள். கடவுள் நர்த்தனமாடுகிற இந்த விரலைக் கொடுங்கள். நான் கடவுளை முகர்ந்து முத்தமிடுகிறேன்" என்று விரலைப் பிடித்து உதட்டில் வைத்துக்கொண்டான் போல்ஸ்கா.

(தி. ஜானகிராமனின் செய்தி என்னும் சிறுகதையின் ஒரு பகுதி.)

தெரியுமா?

தி. ஜானகிராமன் அவர்கள், தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார். இது 1967 இல் நூலாக வெளியிடப்பெற்றது. ரோம், செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களைக் கருங்கடலும் கலைக்கடலும் என்னும் தலைப்பில் 1974இல் நூலாக வெளியிட்டார். தமது காவிரிக்கரை வழியான பயணத்தை நடந்தாய் வாழி காவேரி என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். இவரது மற்றுமொரு பயணக்கட்டுரை, அடுத்த வீடு ஐம்பது மைல் என்பதாகும்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 74 10-07-2018 12:59:46

நூல் வெளி

தி. ஜானகிராமன் தஞ்சை மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகவும் வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகவும் பணியாற்றியவர். வடமொழி அறிவும் சிறந்த இசையறிவும் கொண்ட இவர்தம் கதைகள் மணிக்கொடி, கிராம ஊழியன், கணையாழி, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களில் வெளிவந்தன. நாவல்களையும் நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். "அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை" என்னும் கோட்பாட்டைக் கொண்டவர் இவர். தமிழ்க் கதையுலகம் நவீனமயமானதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

செய்தி என்னும் சிறுகதை சிவப்பு ரிக்ஷா என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. மிகவும் உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும்போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.

தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை உ.வே. சாமிநாதர், மௌனி, தி.ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், தஞ்சை இராமையா தாஸ், தஞ்சாவூர்க் கவிராயர் ஆகியோர்.

தெரிந்து தெளிவோம்

இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக் கருவிகளில் நாகசுரமும் ஒன்று. மங்கலமான பல நிகழ்வுகளில் இக்கருவி இசைக்கப்படுகிறது. இந்தச் சிறப்பான கருவி 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் இந்தக் கருவி கூறப்படவில்லை. 13ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள எந்தப் பதிவுகளிலும் இந்தக் கருவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. தமிழகப் பழைமை வாய்ந்த கோவில் சிற்பங்களிலும் இந்தக் கருவி காணப்படவில்லை. ஆகவே இந்தக் கருவி 13ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகிறது. நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட ஆச்சா மரத்துண்டுகளை நீண்ட நாள்கள் வைத்திருந்த பிறகே இக்கருவி உருவாக்கப்படுகிறது. எனவே பழைய வீடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஆச்சா மரக்கட்டைகளைக் கொண்டே நாகசுரம் செய்யப்படுகிறது. நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக்கொண்டு செய்யப்படுகிறது.

கற்பவை கற்றபின்...

1. *உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறெதுவும் இல்லை – இத்தொடர் குறித்துச் சொற்போர் நிகழ்த்துக.*
2. *பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள உங்களுக்குப் பிடித்த செய்யுள் பகுதிகளை வகுப்பில் இசையுடன் பாடி மகிழ்க.*

KJGQPA

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 75 10-07-2018 12:59:46

இயல் மூன்று

கற்கண்டு

புணர்ச்சி

KJQLQX

நிலைமொழி – வருமொழி

புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக இருந்தாலும் நிலைமொழி, வருமொழி – வருமொழி, நிலைமொழியாகி நிற்கும். எனவே, இருமொழிகளுக்கு இடையே நிகழ்வதுதான் புணர்ச்சி. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ, இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும்போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு; மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.

புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொருத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொருத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்..

புணர்மொழியின் இயல்பு

எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.

கலை + அழகு	உயிரீறு
மண் + குடம்	மெய்யீறு
வாழை + இலை	உயிர்முதல்
வாழை + மரம்	மெய்ம்முதல்

மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

உயிர்முன் உயிர்	மணி (ண்+இ) + அடி = மணியடி
உயிர்முன் மெய்	பனி + காற்று = பனிக்காற்று
மெய்ம்முன் உயிர்	ஆல் + இலை = ஆலிலை
மெய்ம்முன் மெய்	மரம் + (க்+இ) கிளை = மரக்கிளை

இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப் படுத்தலாம். புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

வாழை + மரம்= வாழைமரம்

செடி + கொடி = செடிகொடி

மண் + மலை = மண்மலை

புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை:

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 76 10-07-2018 12:59:46

தோன்றல், திரிதல் கெடுதல்.

நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு (தோன்றல்)

கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை (தோன்றல்)

பல் + பசை = பற்பசை (திரிதல்)

புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

உயிரீற்றுப் புணர்ச்சி

உடம்படுமெய்

உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படுமெய் என்று சொல்வர்.

நிலைமொழியின் ஈற்றில் 'இ,ஈ,ஐ' என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி

ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.

பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்

நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

> இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
> உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
> உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.
> (நன்.162)

சே + அடி = சே + ய் + அடி = சேயடி;

சே + வ் + அடி = சேவடி

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

இவனே + அவன் = இவனே +ய் + அவன் = இவனேயவன்

குற்றியலுகரப் புணர்ச்சி

வட்டு + ஆடினான் = வட்(ட்+உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்

நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.

குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரத்துக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்.

உறவு + அழகு = உற(வ் +உ) = உறவ் + அழகு = உறவழகு

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 77 10-07-2018 12:59:47

தெரிந்து தெளிவோம்

தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து,பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

நாக்கு, வகுப்பு	வன்தொடர்க் குற்றியலுகரம்
நெஞ்சு, இரும்பு	மென்தொடர்க் குற்றியலுகரம்
மார்பு, அமிழ்து	இடைத்தொடர்க் குற்றியலுகரம்
முதுகு, வரலாறு	உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
எஃகு, அஃது	ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
காது, பேசு	நெடில் தொடர்க் குற்றியலுகரம்

மெய்ம்மயக்கம்

புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை 'வலி மிகுதல்' என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

1. 'ய'கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.
   எ.கா. மெய்+மயக்கம்=மெய்ம்மயக்கம்
   மெய்+ஞானம்=மெய்ஞ்ஞானம்
   செய்+நன்றி=செய்ந்நன்றி

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய,ர,ழ முன்னர் மெல்லினம் மிகும்.
   எ.கா. வேய்+குழல்=வேய்ங்குழல்
   கூர்+சிறை=கூர்ஞ்சிறை
   பாழ்+கிணறு=பாழ்ங்கிணறு

3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்.
   எ.கா. புளி+கறி=புளிங்கறி
   புளி+சோறு=புளிஞ்சோறு

4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.
   எ.கா. மா+பழம்=மாம்பழம்
   விள+காய்=விளங்காய்

5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.
   எ.கா. பூ+கொடி=பூங்கொடி
   பூ+சோலை=பூஞ்சோலை
   பூ+தொட்டி=பூந்தொட்டி

கற்பவை கற்றபின்...

1. **எழுத்துவகை அறிந்து பொருத்துக.**

1. இயல் – அ. உயிர் முதல் உயிரீறு

2. புதிது – ஆ. உயிர் முதல் மெய்யீறு

3. ஆணி – இ. மெய்ம்முதல் மெய்யீறு

4. வரம் – ஈ. மெய்ம்முதல் உயிரீறு

KJZHSK

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 78 10-07-2018 12:59:47

2. புணர்ச்சிகளை 'முதல், ஈற்றுச்' சொல்வகையால் பொருத்துக.

1. செல்வி + ஆடினாள் - அ. மெய்யீறு + மெய்ம்முதல்
2. பாலை + திணை - ஆ. மெய்யீறு + உயிர்முதல்
3. கோல் + ஆட்டம் - இ. உயிரீறு + உயிர்முதல்
4. மண் + சரிந்தது - ஈ. உயிரீறு + மெய்ம்முதல்

3. சேர்த்து எழுதுக.

அ) தமிழ் + பேசு ஆ) தமிழ் + பேச்சு இ) கை + கள் ஈ) பூ + கள்

4. பொருத்தமான உடம்படுமெய்யுடன் இணைக்க.

அ) பூ + இனம் ஆ) இசை + இனிக்கிறது இ) திரு + அருட்பா ஈ) சே + அடி

சிந்தனை கிளர் வினாக்கள்

அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுதுக.

ஆ) தற்காலத் தமிழில் குற்றியலிகரத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறோம்?

இ) 'புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும்' - இக்கூற்றை ஆராய்க.

ஈ) **கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.**

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். 'அ + கல்லில்' அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை'யின் தோற்றத்திற்கான சான்றாக 'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள்' இருந்ததை மணிமேகலை மூலம் 'அறிய + முடிகிறது'.

உ) **படக்காட்சியிலிருந்து இருசொல் தொடர்களை அமைத்து, அவற்றின் புணர்ச்சி வகையினைக் கண்டறிக.**

எ.கா. மரக்கிளை – விகாரப் புணர்ச்சி, மூன்று பெண்கள் – இயல்புப் புணர்ச்சி

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 79 10-07-2018 12:59:48

மதிப்பீடு

KK9DU8

பலவுள் தெரிக.

1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ___________

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

2. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்' நிலப் பகுதி _______

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

3. மரவேர் என்பது ________ புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

4. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' –யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ)தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

5) திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ________ .

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

இ) தெய்வ உருவங்கள் ஈ)நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

குறுவினா

1. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.
2. நடுகல் என்றால் என்ன?
3. இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?
4. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
5. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.
6. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

சிறுவினா

1. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?
2. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 80 10-07-2018 12:59:48

3. இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

4. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

5. குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

6. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

நெடுவினா

1. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

2. தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

3. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

மொழியை ஆள்வோம்

படித்துச் சுவைக்க.

வான் தந்த பாடம்	The Lesson the Sky Teaches
எத்தனை பெரிய வானம்!	*How Vast is the sky!*
எண்ணிப்பார் உனையும் நீயே;	*Think you of yourself;*
இத்தரை, கொய்யாப் பிஞ்சு,	*The earth is a tiny*
நீ அதில் சிற்றெறும்பே,	*Guava fruit; you. like all*
அத்தனை பேரும் மெய்யாய்	*Others are a tiny ant*
அப்படித் தானே மானே?	*In it? is that not so?*
பித்தேறி மேல்கீழ் என்று	*Why talk madly of*
மக்கள்தாம் பேசல் என்னே!	*The high and the low?*
– பாவேந்தர் பாரதிதாசன்	*Pavendar Bharathidasan*
	(translated by P. Parameswaran)

மொழிபெயர்க்க.

1. *Strengthen the body*
2. *Love your Food*
3. *Thinking is great*
4. *Walk like a bull*
5. *Union is Strength*
6. *Practice what you have learnt*

(– Putiya Athichoti by Bharathiyar)

மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

எட்டாக்கனி, உடும்புப்பிடி, கிணற்றுத்தவளை, ஆகாயத் தாமரை, எடுப்பார் கைப்பிள்ளை, மேளதாளத்துடன். (எ.கா.) முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 81 10-07-2018 12:59:48

பத்தியில் இடம்பெற்றுள்ள இயல்பு புணர்ச்சிகளையும் விகாரப் புணர்ச்சிகளையும் எடுத்தெழுதுக.

காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதேபோன்று காஞ்சி வைகுந்தபெருமாள் கோவிலிலும் பல்லவர்காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வச்சிற்பங்கள் மட்டுமல்லாது பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவுவாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பதுபோன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.
2. கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டான்.
3. நேற்று தென்றல் காற்று அடித்தது.
4. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.
5. அணில் பழம் சாப்பிட்டது.
6. கொடியிலுள்ள மலரை எடுத்து வா.

(எ.கா.) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

கவிதை படைக்க.

மூடநம்பிக்கை, புவியைப் போற்று, அன்பின்வழி

(எ.கா.) மூடநம்பிக்கை

பூனை குறுக்கே போனதற்குக்
கவலைப்படுகிறாயே!
அந்தப் பூனைக்கு என்ன ஆனதோ?

மொழியோடு விளையாடு

விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.



athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181
9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 82 10-07-2018 12:59:49

கண்டுபிடிக்க.

1. எண்ணும் எழுத்தும் கண் – இந்தத் தொடரை ஒருவர் 1 2 3 4 1 5 6 7 4 8 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றிக் கீழ்க்காணும் சொற்களை எப்படிக் குறிப்பிடுவார்?

   அ) எழுது ஆ) கண்ணும் இ) கழுத்து ஈ) கத்து

2. என் வகுப்பில் படிக்கும் அனைவரும் புதிய புத்தகம் வைத்திருந்தனர். இராமனும் புதிய புத்தகம் வைத்திருந்தான். எனவே, இராமன் என் வகுப்பு மாணவன் – இக்கூற்று

   அ) உண்மை ஆ) பொய் இ) உறுதியாகக் கூறமுடியாது

அகராதியில் காண்க.

ஏங்கல், கிடுகு, தாமம், பான்மை, பொறி

உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக.

1. மலர்விழி வீணை வாசித்தாள்; கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
2. குழலியின் இசையைச் சுவைத்தவர், கடல் போன்ற கவலையிலிருந்து நீங்கினர்.
3. தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்.
4. முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

....

....

....

....

....

....

செயல் திட்டம்

உங்கள் மாவட்டத்தின் கலைநயம் மிக்க இடங்களின் சிறப்புகளைப் படங்களுடன் திரட்டிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.

நிற்க அதற்குத் தக

என்னை மகிழச்செய்த பணிகள்

(எ.கா.)

1. இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன்.
2. எனது வகுப்பறையில் கரும்பலகையின்கீழ் சிதறிக்கிடந்த சுண்ணக்கட்டித் துண்டுகளைத் திரட்டி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் கைத்தட்டல் பெற்றேன்.
3. _.

கலைச்சொல் அறிவோம்

குடைவரைக் கோவில் – Cave temple,
கருவூலம் – Treasury,
மதிப்புறு முனைவர் – Honorary Doctorate,
மெல்லிசை – Melody
ஆவணக் குறும்படம் – Document short film ,
புணர்ச்சி – Combination

அறிவை விரிவுசெய்

நட்புக்காலம் – கவிஞர் அறிவுமதி
திருக்குறள் கதைகள் – கிருபானந்தவாரியார்
கையா, உலகே ஒரு உயிர் – ஜேம்ஸ் லவ்லாக்
– தமிழில்: சா. சுரேஷ்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 83   10-07-2018 12:59:50

இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/courses/degree/d051/d0512.pdf
http://www.tamilvu.org/courses/degree/a011/a0114/html/A0114331.htm
http://www.tamilsurangam.in/literatures/divya_prabandham/naachiyaar_thirumozhi.html#.WqolcuhuZPY
https://sites.google.com/site/rsrshares/home/03-thi-janakiraman-stories-and-novels

இணையச் செயல்பாடுகள்

தமிழ்நாடு இ-சேவை

எளிதாய் விண்ணப்பிக்கலாமே இனி!



படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி, தமிழ்நாடு இ–சேவை என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியின் முதல் பக்கத்தில் ஆதார் சேவை, பான் கார்டு, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, காவல்துறை புகார் தொடர்பான செய்திகள் அறிதல், திருமணச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு அரசு சார்ந்த இ–சேவைக்கான தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதை அறிக.
- உதாரணத்திற்கு பான் கார்டு என்பதில் பான் பதிவு NSDL என்பதைத் தெரிவு செய்து online PAN application என்பதில் உங்கள் சுய விவரங்களைப் பூர்த்தி செய்து இ–சேவையில் விண்ணப்பிக்க.





செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.tn.android.eservice

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_1_84_06_07_2018.indd 84 10-07-2018 12:59:53

திருக்குறள்

வினைத்தூய்மை (66)

1) துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

2) என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

3) ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

4) இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்
நடுக்குஅற்ற காட்சி யவர்.

5) எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

6) ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

7) பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

8) கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

9) அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

10) சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.

பழைமை (81)

1) பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

2) நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு
உப்புஆதல் சான்றோர் கடன்.

3) பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை?

4) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.

5) பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின்.

6) எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

7) அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

8) கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

9) கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

10) விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_85_88_06_07_2018.indd 85 10-07-2018 12:55:11

தீ நட்பு (82)

1) பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

2) உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

3) உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

4) அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

5) செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

6) பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுஉடையார்
ஏதின்மை கோடி உறும்.

7) நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்.

8) ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்ஆடார் சோர விடல்.

9) கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

10) எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

பேதைமை (84)

1) பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல்.

2) பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல்.

3) நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

4) ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

5) ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு.

6) பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின்.

7) ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

8) மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

9) பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதுஒன்று இல்.

10) கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_85_88_06_07_2018.indd 86 10-07-2018 12:55:11

புல்லறிவாண்மை (85)

1) அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.

2) அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்.

3) அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

4) வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

5) கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

6) அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

7) அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

8) ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

9) காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

10) உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி வைக்கலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான கதைகள், நாடகங்களை இலக்கியமன்ற கூட்டங்களில் நடத்தச் செய்யலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து "வினாடி வினா" நடத்தலாம்.
- உலகப் பொதுமுறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அல்ல.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

9th_Tamil_Pages_85_88_06_07_2018.indd 87 10-07-2018 12:55:11

ஒன்பதாம் வகுப்பு – தமிழ்
ஆக்கம்

ஆலோசனைக் குழு

முனைவர் இ. சுந்தரமூர்த்தி,
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் சி. சுப்பிரமணியன்,
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் கி. நாச்சிமுத்து,
மேனாள் பேராசிரியர், மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

முனைவர் வீ. அரசு,
மேனாள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

மேலாய்வாளர் குழு

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம், மேனாள் தமிழியல் துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

திரு பிரபஞ்சன், எழுத்தாளர், புதுவை.

முனைவர் பா. மதிவாணன், தமிழ்த்துறை தலைவர் பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

திரு. ம. இராமகிருட்டினன், முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

பாட வல்லுநர் குழு

முனைவர் மு. சுதந்திரமுத்து,
இணைப்பேராசிரியர் (ப.நி), மாநிலக் கல்லூரி, சென்னை.

முனைவர் பா. டேவிட் பிரபாகர், இணைப்பேராசிரியர்
சென்னை கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.

முனைவர் த. புகழேந்தி, இணைப்பேராசிரியர்
நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை.

முனைவர் ச. திருஞானசம்பந்தம்,
இணைப்பேராசிரியர் (ப.நி), தமிழ்த்துறை உயராய்வு மையம் , அரசர் கல்லூரி, திருவையாறு

முனைவர் சு. தாமரைப்பாண்டியன்,
உதவிப்பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி , சென்னை.

முனைவர் இரா. இலட்சாராமன், முதல்வர் (ப.நி), ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் அறிவியல் கல்லூரி, மயிலம், விழுப்புரம்.

முனைவர் க பலராமன்,
உதவிப்பேராசிரியர், நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

வரைகலை & வடிவமைப்பு

பழையவலம் திரு. பா. இராமநாதன், சென்னை.

தரக் கட்டுப்பாடு

திரு. சு. கோபு, ஐ திங்க் கிரியேஷன்ஸ், வடபழனி, சென்னை.
திரு. எம். கரண், இன்ஃபினிட் அனிமேஷன் ஸ்டுடியோ, நந்தனம்,சென்னை.

வரைபடம்

திரு க.த. காந்திராஜன்,
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை

திரு ச.கௌதம்,

திரு பொ. வள்ளிநாயகம், ஓவிய ஆசிரியர்,
ஸ்ரீமந்திரமூர்த்தி மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.

மு. விசுவேசுவர ஆசிவேல் குமரன், ஓவிய ஆசிரியர்,
அ.மே.நி. பள்ளி, முண்டியம்பாக்கம், விழுப்புரம்.

கா. புகழேந்தி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு முன்மாதிரி மே.நி. பள்ளி, புதுக்கோட்டை.

திரு ஏ. ஜேம்ஸ்பாண்ட், ஓவிய ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, அரசர்குளம், அறந்தாங்கி, புதுக்கோட்டை.

திரு. ஜேசுநாதன், ஓவியர், சென்னை.

திரு க. சந்திவீரன், அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

திரு. வெ. கார்த்திகேயன், அரசு கவின் கலைக்கல்லூரி , சென்னை

திரு. தீபக் ராஜன், வேல்முருகன், பிரமோத்,
திரு. சார்லஸ், கோகுல கிருஷ்ணன்,
ஓவியர்கள், சென்னை.

நன்றி

ஓவியர்கள்
திரு. கோபுலு
திரு. மாதவன்
திரு. மனோகர் தேவதாஸ்
திரு. மணியன் செல்வன்
திரு. பெருமாள்

அட்டைப்படம்

கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி ப. சுமதி, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை.

திரு நா. ஹரிகுமார், பட்டதாரி ஆசிரியர், இராஜாமுத்தையா மேல்நிலைப் பள்ளி, இராஜாஅண்ணாமலைபுரம், சென்னை.

திரு வே. சங்கர்ராம், பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சங்கரன்கோவில், திருநெல்வேலி.

திரு மு. பாலகிருஷ்ணன், பட்டதாரி ஆசிரியர், எஸ். எஸ். என். அரசு மேல்நிலைப் பள்ளி, கொம்மடிக்கோட்டை, தூத்துக்குடி.

திருமதி வெ. மீனாட்சி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, ஏனாத்தூர், காஞ்சிபுரம்.

முனைவர் கோ. நாராயணமூர்த்தி, பட்டதாரிஆசிரியர்,
பாரதி மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்.

திரு அ. பாண்டியன், பட்டதாரி ஆசிரியர்,
அ.வே.நா.செ. அரசு மேல்நிலைப் பள்ளி, ஜி.அரியூர், விழுப்புரம்.

திரு இரத்தின. புகழேந்தி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, மன்னம்பாடி, கடலூர்.

திரு இரா. பாண்டியன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, வெண்பாவூர், பெரம்பலூர்.

திரு க. வேல்முருகன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, ஆர்ப்பாக்கம், திருவண்ணாமலை.

திரு ஆ. சின்னதுரை, பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, தேவியாக்குறிச்சி, சேலம்.

திரு அ. இரவிச்சந்திரன், முதுகலை ஆசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மணப்பாறை, திருச்சி.

திரு வெ. பாலமுருகன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரம்பாக்கம், திருவள்ளூர்.

திரு க. சிவக்குமார், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ஏலாக்குறிச்சி, அரியலூர்.

திரு கும. திருப்பதி, பட்டதாரி ஆசிரியர்,
மு.நா.செ. உயர்நிலைப் பள்ளி, கொப்பணாபட்டி, புதுக்கோட்டை.

கவிஞர் நா. முத்துநிலவன், தமிழாசிரியர் (ஓய்வு),
அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை.

திருமதி கோ. தாட்சாயணி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அயப்பாக்கம், சென்னை.

திரு அ. அந்தோணிராஜ், முதுகலைத் தமிழாசிரியர்,
புனித வளனார் மேல்நிலைப் பள்ளி, மஞ்சக்குப்பம், கடலூர்

கணினித் தொழில்நுட்பம்

திரு இரவிக்குமார், விரிவுரையாளர்,
மா.ஆ.க.ப.நி, சென்னை.

செல்வி த. ரேவதி, பட்டதாரி ஆசிரியர்,
ந.உ.நி.ப. இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை.

ஒருங்கிணைப்பு

திருமதி. க.சு. சங்கீதா, உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் நா. அருள்முருகன், துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

ஒருங்கிணைப்பு உதவி & தட்டச்சர்

திருமதி டி.தே. ஷர்மிளா, பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி, மோசூர், வேலூர்.

திருமதி. ப. குமுதா,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

விரைவுக் குறியீட்டு மேலாண்மைக் குழு

திரு. இரா. ஜெகநாதன்,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணேசபுரம்–போளூர், திருவண்ணாமலை.

திரு. ந. ஜெகன்
அ.அ.மே.நி.பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம்.

திரு. ஜே.எப். பால் எட்வின் ராய்,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181